R611-97-98 1181 12385 R611-97-98 1181
MAHAMAHOPADHYAYA DR. U. V. SWAMINATHA IYER LIBRARY TIRUVANMIYUR MADRAS

Vol XIV 1935-1936

செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு.

பதினான்காம் சிலம்பு

இதழாசிரியர் கூட்டத்தலைவர்

மா. வே. நெல்லையப்ப பிள்ளை

அவர்கள். பி. ஏ.

திருநெல்வேலி, தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக்

கழகம் லிமிடெட்.

யுவ-தாது ௵

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.
Tinnevelly and Madras

All Rights Reserved]

[Price Rs. 3 8 0

‘செந்தமிழ்ச் செல்வி’ இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

(Editorial Board Members)

தலைவர்

1. திருவாளர் M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள், B.A.,
பென்ஷன் தாசில்தார், சிந்துபூந்துறை.

---

2. ,, கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M.A., M.L.,
தலைவர், மணிவாசக மன்றம், திருநெல்வேலி.

3. ,, பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
தமிழாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.

4. ,, துடிசைக்கிழார் A. சிதம்பரனாரவர்கள்
ரிட்டையர்ட் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், கோவை.

5. ,, பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள்,
தமிழாசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.

6. ,, T. S. கந்தசாமி முதலியாரவர்கள், B.A.,
வழக்கறிஞர், சாத்தூர்.

7. ,, ஆ. கார்மேகக் கோனாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், அமெரிக்கன்கல்லூரி, மதுரை.

8. ,, வித்வான் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், செயிண்ட் சேவியர் காலேஜ், பாளையங்கோட்டை.

9. ,, அ. மு. சரவண முதலியாரவர்கள்,
தமிழாசிரியர், லாலுகுடி.

10. ,, காழி. சிவ. கண்ணுசாமிப் பிள்ளையவர்கள், B.A.,
தருமபுரவாதீன வித்துவான், சென்னை.

உள்ளுறை

[*இக் குறியிடப்பட்டவை இத் தொகுதியில் முடிவுபெறாது தொடர்வன.]

அகப்பாட்டு—இ. சிவகுருநாதன் ... ருசங

* அகப்பொருளழகு—வித்துவான் மணி திருஞான சம்பந்த முதலியார் ... கக0, கஎசு, உஎஅ, சருசு

அடிப்படிப்பு—கபசம் ... சஅ

இந்திய நாடும் சமஸ்கிருதமும்—அ. நடராச பிள்ளை .... ருக

கம்பரும் காதல்மணமும்—வித்துவான் மா. இராசமாணிக்கம் ... சுஉ, ககரு

கம்பரும் மக்கட்பேறும்—வித்துவான் மா. இராசமாணிக்கம் .... கஎய

கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும்—பா. வே. மாணிக்க நாயக்கர் .... சு

*கம்பரும் வள்ளுவரும்—சு. அருளம்பலம் .... சருக, ருஙஎ

காணப்படாது காண்டல்—அ. சிதம்பரநாதஞ் செட்டியார், B. A. (Hons.) ... ஙஎங

கானல் வரி—பண்டிட் அ. நடராச பிள்ளை ... உங, எரு

*குறுந்தொகை உரை—வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன் .... சுசு, கஉகூ, கசுங, உசுகூ, ஙசுஅ, சகரு, சருசு, ரு0அ, ருசஎ

*குறுந்தொகை மொழி பெயர்ப்பு—T. B. கிருஷ்ணசாமி முதலியார், எம். ஏ., பி. எல். .... உசஅ, சஙரு

நம் முதல்—வித்துவான் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் .... ருருக

சதுரங்கம்—இராவ் சாஹிப் C. M. இராமச் சந்திரஞ் செட்டியாரவர்கள் ... ககூக, ஙககூ

சிற்ப நூல்—துடிசைகிழார் அ. சிதம்பரனார் ... ௪௬௧, ௨௯௫

*சிவஞான போதக் கருத்து—மா. வே.
நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ. ... ௯௭, ௧௫௰
௨௩௫, ௪௭௯, ௨௬௬, ௩௩௰, ௩௮௩, ௪௩௧, ௫௨௰
௫௫௪

செந்தமிழ்ச் சிறப்பு—கு. இராமசாமி பிள்ளை ... ௪௯௭

செந்தமிழ்ச் செல்வி—வித்துவான் இரா. சிவ. சாம்ப
சிவ சர்மா ... ௪௦௬

செய்திகளும் குறிப்புகளும் ... ௧௦௩, ௧௫௫,
௨௫௰, ௨௯௭, ௩௫௨, ௩௯௭,

சென்னை சைவசித்தாந்த மகா சமாஜமும்
கழகமும் ... ௪௪௨, ௪௮௫,
௫௨௮, ௪௮௮

சேதுபதிகளும், அவர்களுடைய நாணயங்
களும்—வித்வசிகாமணி ப. அ. முத்துத்
தாண்டவராய பிள்ளை ௧௮௫, ௩௨௩,
௪௨௩, ௫௧௨, ௫௬௧

சோக்கட்டான்—இராவ் சாஹிப் C. M.
இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் ௧௩, ௮௩

ஞாலநூல்—S. நடராஜன், பி. ஏ. ... ௩௩, ௧௩௭
தமிழ்த்தாயின் தண்ணொளி—S. K. இராம
சாமி பிள்ளை ... ௪௦௩

தமிழர் தோன்மை—விருதை சிவஞான
யோகி ௩௦௮

தமிழும் ஹிந்தியும்—யா. ஞா. அழகனார் ... ௩௬௧

தமிழ் அருமை வெளிப்படுத்தல்—வித்துவான்
பெ. கோவிந்தன் ... ௩௮௭
தமிழ்அளவை நூற்சொற்கள்—மா. பால
சுப்பிரமணியம், எம். ஏ. ... ௪௧, ௯௧,
௧௯௬

தமிழ் மொழி வாழ்த்து— .... அரு

*தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம்
பா. வே. மாணிக்க நாய்க்கர், க. ப.
சந்தோஷம் ... ருரு அ, சருசு,
சசுசு

தமிழ்நாட்டுச் சிறப்பு—வித்துவான் பெ.
கோவிந்த மூப்பனர் ... சசஅ

தலைமை யுரை—திவான் பகதூர் பொ.
சுப்பையா முதலியார், ... ககசு
பி. ஏ., பி. எல்.
,, வி. நாடிமுத்துப் பிள்ளை,
M. L. C. ... உகO
,, பண்டித ந. மு. வேங்கட
சாமி நாட்டார் ... சகஎ

தனிச் செய்யுள் உரை
நாவாலியூர் க. வேலுப்பிள்ளை, ருஎச

தனித்தமிழும் கலப்புத்தமிழும்—வே.
மாணிக்கவாசகம் .... கருஉ, கஅ௰,
உஉசு

*திராவிடக் குழு—காழி சிவ. கண்ணுசாமி,
B. A. ... சஎச, ருசுரு

திருக்குறள்—பா. வே. பொன்னுசாமி
நாய்க்கர் ... ருOசு

திருவஞ்சைக் குளம்—துடிசைகிழார் அ.
சிதம்பரனர் ... அச

திருவள்ளுவர்—மறைமலை யடிகள் ... கஎ, ருகூ

திருவள்ளுவர் சிந்தனை—பண்டிட் அ. நட
ராஜ பிள்ளை .... ருஎ

திருவள்ளுவர் முதற்குறள் விருத்தம்—கபசம்... கOஉ
திருவள்ளுவர் சமயம்—பொ. முத்தையா
பிள்ளை ... உருக

திருவாசகம் உரை—மா. வே. நெல்லையப்ப பிள்ளை, B. A. ... ௧, ௫௩, ௧௦௬, ௨௦௫, ௩௦௧, ௩௫௮, ௪௪௫, ௪௯௩, ௫௩௩

தெலுங்கு மொழிப் புலவர்கள்—சி. கு. நாராயணசாமி முதலியார் ௩௮௯, ௫௦௧, ௫௯௮

தேவார உரை—மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி. ஏ. ... ௪, ௧௦௫, ௧௫௭, ௨௫௩, ௪௦௧

கா. நமச்சிவாய முதலியார் வரலாற்றில் ஒரு குறிப்பு—சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை ௩௯௩

பண்டைத் தத்துவம்—காழி சிவ. கண்ணு சாமி, பி. ஏ. ௨௬௬

பண்டைத் தமிழிசை ஆராய்ச்சி—சுவாமி விபுலானந்தர் ... ௩௪௩, ௩௯௪, ௪௨௭

பாயிரப் பொருள் தொகையும் விரிவும்—வீரமா முனிவர் ... ௩௬௬, ௪௧௧

புத்தகமும் வித்தகமும்—திருமதி குண ஜனார்த்தனம், M. A., L. T. ௨௯௦

பொய்யாமொழிப் புலவர்— ௧௩௫

பொருள்களின் ஆக்கப்பாடு—T. V. அருணசலம் பிள்ளை, B. A. (Hons.) ... ௧௪௫, ௧௯௫

மல்லிகையும் கனகாம்பரமும்—வே. பா. கமலநாத முதலியார் ... ௩௭௮

மதிப்புரை— ... ௫௨, ௨௦௦, ௩௦௦, ௩௯௮, ௫௩௦

மலைபு எழுத்துக்கள் ... ௫௦

மலைபுச் சொற்றொடர் ... ௧௦௦

மலைபுத் தொடர்கள் ... ௩௮௨

மழை பொழியப் பாடியது—*வித்துவான் மதுரஞ் சுந்தர பாண்டியனார்* ... ௩௦௬

மழையே வருகென வழுத்தி வேண்டல்— ... ௧௬௧

மாமண்ணேர்க் குகைக் கோயில்கள்—*கி. சாமிக்கண்ணு* ... ௩௧௯

முத்துக்குமார சுவாமி பிள்ளை, *பி. ஏ.* ... ௪௫

மெய்யறிவின் மாண்பு—*வித்துவான் S. மஹாலிங்கம்* ... ௨௬௮

ஹாதர் பர்பாங்க்—*காழி. சிவ. கண்ணுசாமி பி. ஏ.* ... ௧௦௧

வடமொழி சென்ற தென்சொற்கள்—*பண்டித ஞா. தேவநேயப் பாவாணர்* ... ௨௮, ௭௯

வடிவு திருந்த அறிவு வளர்ந்த வகை—*க. ப. சந்தோஷம்* ... ௩௬, ௯௨, ௧௪௮, ௨௪௨

விட்டிலும் நானும்—*கீ. இ.* ... ௫௬௮

வெண்பாவில் புகழேந்தி—*கா. பொ. இரத்தினம்* ... ௨௨௨, ௨௫௬

ஹிந்தி மொழிப் பயிற்சியா?—*சு. நடராச பிள்ளை, பி. ஏ.* ... ௩௦௯

படங்கள்

திருவனந்தபுரம் தி. முத்துக்குமார சுவாமிப்பிள்ளை, B.A.

மாநூற் பேரறிஞர் லூதர் பர்பாங்க்

மதுரை எம். திரவியம் பிள்ளை

சென்னை டாக்டர் S. அரங்காச்சாரியார்

மு. ரா. கந்தசாமி கவிராயர்

ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி.

திரு. வி. கலியாண சுந்தர முதலியார்

கா. நமச்சிவாய முதலியார்

சுவாமி விபுலானந்தர், பி. எஸ். ஸி.

துடிசைகிழார் அ. சிதம்பரனார்

பா. மா. முருக மாணிக்கம் புதிதாய் அமைத்த காற்பொறி

S. வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.

சர். T. N. சிவஞானம் பிள்ளை, பி. ஏ.

S. அனவரத விநாயகம் பிள்ளை, எம். ஏ., எல். டி.

M. S. பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ., எல். டி.



திருவனந்தபுரம்
தி. முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை, B.A.,

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-கச] யுவ—ஆவணி [பரல்-க

திருவாசகம்

கண்டபத்து

இந்திரிய வயமயங்கி யிறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோ யருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அந்தமிலா வானந்த மணிகொடில்லை கண்டேனே.

பதவுரை:—

இறப்பதற்கே காரணமாய்—(இந்த அருமை மானுடப் பிறவி உலக வாழ்வில் பெறுதற்குரிய பேரின்பப் பெரும் பயனை அடையாமல்) வீணே சாதற்றன்மையை அடைதற்கு ஏற்ற வழியில்,

இந்திரியவயம்—மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளின் வயப்பட்டு,

மயங்கி—அதனால் உலக வாழ்வு இன்பமே நிலையுள்ளது என மயங்கி அறிந்து,

அந்தரம் திரிந்துபோய்—அம்மயக்க அறிவு பற்றிச் சிந்தை வேறுபாடுடையவனாய்ப் பலவகை உலக போகங்களைத் தேடுதலிலும், நுகர்தலிலும் உழன்று சென்று,

அருநரகில் வீழ்வேற்கு— முடிவில் கடத்தற்கு அரிய நிரயத்தில் வீழ்ந்து துன்பமடைய இருப்பவனாகிய எனக்கு,

சிந்தைதனைத் தெளிவித்து—(அவ்வாறு நான் இறந்து நிரயத் துன்பம் அடையாதபடி) எனது சிந்தையானது மயக்க அறிவினின்று நீங்கிச் சிவமே மெய்ப்பொருள் என்று உணரும் தெளிந்த அறிவை அடையும்படி செய்து,

சிவம் ஆக்கி—அவ்வாறு தெளிந்த எனது சிந்தையில் தன்னுடைய எண் குணங்களையும் பதிவித்து அதனை மலம் முற்றிலும் நீங்கிய சிவத் தன்மையை உடையதாகும்படி செய்து,

எனை ஆண்ட—ஆண்டவனாகிய தான் என்னைத் தனது அடிமையாகக் கொண்டு பேரின்பம் அருளிய,

அந்தம் இலா ஆனந்தம்—முடிவில்லாத பேரின்பப் பொருளாகிய சிவபெருமானை,

அணி கொள் தில்லை—அழகு பொருந்திய திருத்தில்லைத் தலத்தில்,

கண்டேன்—நான் (எனது அகக்கண்ணினாலே) நேரே பார்த்து உணர்ந்தேன்.

விளக்கவுரை :—

இறப்பதற்கே காரணமாய்—பேரின்பப்பேற்றையே நாடி சிவபெருமானது அருளைத் துணையாகக்கொண்டு ஒழுகாமல் உலகபோக நுகர்வுகளையே தேடி நுகர்ந்தொழுகுதலின் பயனாக உலக வாழ்வு முடிவில் கூற்றுவனால் உடலானது உயிரினின்றும் பிரிக்கப்பட்டு இறத்தலும், இறந்தபின் துறக்க நிரயங்களிற் சென்று பின், பிறத்தலும் திண்ணமாதலின் பிறப்பதற்கே காரணமாய் என்றார். ஏகாரம் தேற்றத்தைக் குறிக்கிறது.

இந்திரியவயம்—இந்திரியம்=பொறி; ஐந்து அறிவுக் கருவிகள் (ஞானேந்திரியங்கள்.) ஐம்பொறிகள், மனம் அகங்காரம் புத்தி சித்தம் ஆகிய அந்தக்கரணங்கள் வாயிலாகவும், அந்தக்கரணங்கள் ஆன்மாவினாலும் தொழிற்படுதலினால் இந்திரியவயப்படுதல் என்பது ஆன்மா மேல்நோக்காது கீழ்நோக்கி அந்தக்கரணங்கள் ஐம்பொறிகள் ஆகிய இவை உலகபோக நுகர்ச்சியைத் தேடிச் செல்லும் வழியே செல்லுதல் ஆகும்.

மயங்கி—மயக்க அறிவை உடையவனாகி. சிவத்தை அடையும் பேரின்பமே நிலையாயுள்ள மெய்இன்பம் என அறியும் அறிவுக்கு வேறாக உலகவாழ்வுச் சிற்றின்பமே நிலையான இன்பமெனத் திரிவுபட அறிதல் மயக்க அறிவு ஆகும்.

அந்தரமே திரிந்து—அந்தரம்=வேறுபாடு. அஃது இங்கே மயங்கி அறிதலாகிய வேறுபாடுடைய சிந்தையைக் குறிக்கிறது. பின்னே கூறப்படுகிற தெளிந்த சிந்தைக்கு எதிரிடையான சிந்தை. ‘ வேறு சிந்தையிலாதவர் தீவினை—கூறுசெய்த குழகன்’’ என்று திருநாவுக்கரசு அடிகள் (134—4) தேவாரப் பாட்டிற் கூறியிருத்தல் காண்க. ஆன்மா இறந்தபின் முதலாவது நிரயம் சென்று பின் துறக்கம் புகுதல் மரபு ஆதலின், அந்தரம் என்ற சொல்லுக்கு வான் அல்லது வானுலகம் என்று பொருள் கூறுதல் பொருந்தாது. திரிதல் என்பது எந்த உலக

போகம் நிலையான இன்பம் பயக்கும் என்று ஓயாது ஒன்றை விட்டொன்று பற்றி உழலுதல். அந்தரமே என்ற சொல்லின் கடையிலுள்ள 'ஏ' அசை.

அருநரகில் வீழ்வேற்கு—நிரயத்துன்பத்தினின்று நீங்குதல் அரியது ஆதலின் அரும் நரகு என்றார்.

வீழ்வேன்—உயர்திணை ஆண்பால் ஒருமைத் தன்மை எதிர்கால வினையாலணையும் பெயர். வீழ்வேற்கு—வீழ இருப்பவனாகிய எனக்கு.

சிந்தைதனைத் தெளிவித்து—சிந்தையைத் தெளிவித்தல் என்பது சிவபெருமான் ஆன்மாவுக்குத் தனது அருட்பேரொளியைக் காட்டி அதன்கண் அடங்கி நிற்கும்படி செய்தல். இதனால் ஆன்மாவுக்கு முற்றிலும் மலநீக்கம் உண்டாகிறது. இது சிவபெருமான் ஆன்மாவுக்கு வேறாய் நின்று காட்டும் உதவியாகும். ஆன்மாவினது தெளிந்த சிந்தையில் முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்துநிற்கிற சிவம் ஆன்மாவினுடன் அத்துவிதமாய்க் கலந்து விளங்கி நிற்றலால் 'சிந்தைதனைத் தெளிவித்து' என்றார். "சிந்தையினுள்ளே தெளியவல்லார்க்குச் சிந்தையினுள்ளே சிவனிருந்தானே" என்று **திருமூலர் 2853-வது திருமந்திரப்** பாட்டிற் கூறியிருத்தல் காண்க.

சிவம் ஆக்கி—சிவம்=சிவத்தன்மை. சிவமாகுதல்=சீவத்தன்மை நீங்கிச் சிவத்தன்மை அடைதல். மலத்தன்மை முற்றிலும் நீங்கிய ஆன்மாவுக்குச்சிவபெருமான், முற்றுணர்வு முதலிய தன்னுடைய எண் குணங்களையும் ஆன்மாவினிடத்திற் பதியச் செய்தலால் சிவத்தன்மை உண்டாகிறது. ஆன்மா இவ்வாறு சிவத்தன்மை அடைந்த பின்பே சிவனுடைய பேரின்பம் நுகருதற்குத் தகுதியுடையதாகின்றது. இது சிவபெருமான் ஆன்மாவோடு உடனாய் நின்று விடயப்பொருளாகிய தன்னைக் காணச்செய்யும் காணும் உதவியா லுண்டாகிறது. இத்தகைய சிவத்தன்மையைச் சிவபெருமான் தமக்கு உண்டாக்கினான் என்பார், சிவமாக்கி என்றார்.

எனை ஆண்ட—'என்னை' என்ற சொல் 'எனை' எனக் குறுகியது. 'ஆளுதல்' என்பது ஆண்டவன் ஆகிய சிவபெருமான் அடிகளை அடிமையாகக்கொண்டு ஆண்டு பேரின்பம் அருளியதைக் குறிக்கிறது.

அந்தமிலா ஆனந்தம்—இறவாத பேரின்பம் (நிரதிசய இன்பம் Infinite Bliss) அளவில் அடங்காது நுகருந்தோறும் மேலும் மேலும் பெருகி வளர்தலால், 'அந்தமிலா ஆனந்தம்' என்றார். 'ஆனந்தம்' என்ற சொல் இங்கே ஆனந்த உருவன் ஆகிய சிவபெருமானைக் குறிக்கிறது.

கண்டேன்—காணுதல் என்பது இங்கே அகக்கண்ணாற் கண்டு தம்முள்ளே உணர்தலைக் குறிக்கிறது. 'ஏ' அசை.

இந்தப் பாட்டில் சிந்தை தெளிவித்தல், சிவமாக்கல், ஆண்டு (பேரின்ப மளித்தல்) ஆகிய மூன்றும் முறையே ஆன்மாவோடு பிரிவறக் கலந்துநிற்கும் சிவபெருமான் ஆன்மாவுக்கு வேருய் நின்று காட்டும் உதவியையும், உடனுய் நின்று காணும் உதவியையும் ஒன்ருய் நின்று பேரின்ப மருளுதலையுங் குறிக்கின்றன. இம்மூன்றும் சிறப்பியல் அத்துவித நிலைகள். இம்மூன்று அத்துவித நிலைகளும் 'இன்றெனக்கருளி' என்ற முதற் குறிப்புப் பாட்டிலும் பல திருவாசகப் பாட்டுக்களிலும் கூறப்பட்டிருத்தல் காண்க.

திருஞானசம்பந்த அடிகள் தேவாரம்

திருமுதுகுன்றம்—திருவிருக்குக் குறள்

மணியார் முதுகுன்றைப்—பணிவாரவர் கண்டீர்
பிணியாயின கெட்டுத்—தணிவா ருலகிலே.

பதவுரை:—

மணியார் முதுகுன்றை—அழகு நிறைந்துள்ள திருமுதுகுன்றம் என்ற திருப்பதியில் திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கின்ற சிவபெருமானை,

பணிவார் அவர்—எவர் அன்போடு உள்ளம் நா மெய்களால் தொழுவாரோ அவர்,

உலகில்—இவ்வுலகிலே,

பிணியாயின கெட்டு—ஆணவம் வினை மாயை என்னும் மூன்று மலங்களின் கட்டிலிருந்து நீங்கி,

தணிவார்—பெருமிதமின்றி அடங்கிப் பிறரிடம் தாழ்மையாந் தன்மையுடன் ஒழுகுவார்.

விளக்கவுரை:—

மணியார் முதுகுன்றை—மணி=அழகு; ஆர்தல்=நிறைதல். முதுகுன்று என்பது திருமுதுகுன்றம் என்ற திருப்பதி. அஃது இக்காலத்தில் விருத்தாசலம் என்ற வடமொழிப் பெயரால் வழங்கப்படுகின்றது. முதுகுன்றம் என்ற சொல் இங்கே திருமுதுகுன்றத்தில் திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கின்ற சிவபெருமானைக் குறிக்கிறது.

பணிவார் அவர்—பணிதல் என்ற தமிழ்ச்சொல் எவர்க்கும் தாழ்மையாந்தன்மையோடு மனம் நா மெய்களால் நலஞ்செய்து ஒழுகுதலைக் குறிக்கிறது. "எல்லார்க்கும் நன்ரும் பணிதல்" என்ருர்

தெய்வப் புலமைத் திருவள்ளுவர். அஃது இங்கே அடிமையாகிய உயிர்கள் ஆண்டவனாகிய இறைவனை அவனது பெருமையையும் தங்களுடைய சிறுமையையும் நினைந்து தன்முனைப்பின்றி மனதால் நினைந்து உருகியும், நாவால் வாழ்த்தியும், மெய்யுறுப்புக்களால் எட்டுறுப்பு வணக்க முதலியன செய்தும் தொழுதலைக் குறிக்கிறது.

கண்டீர்—முன்னிலை அசைச்சொல்.

பிணியாயின—பிணி=கட்டு. பிணி என்பது உயிர்களைக் கட்டுவனவாயுள்ள ஆணவம் வினை மாயை என்னும் மும்மலங்கள். 'கெடுதல்' என்பது உயிர்களைக் கட்டுதலினின்றும் நீங்குதல்.

தணிவார்—'தணிதல்' என்பது தாழ்தல். பெருமிதமின்றி அடங்கியிருத்தல். மேலே கூறப்பட்ட பணிதலும் தணிதலும் ஒரு பொருட் சொற்கள். இறைவனை வணங்கி மலப்பிணிப்பு நீங்குதல் பற்றி மக்கள் பிறரிடத்தில் பெருமிதமின்றி ஒழுகுவார் என்பது கருத்து.

இந்தப் பாட்டில் திருஞானசம்பந்த அடிகள் இறைவனை மெய்யன்போடு தொழுகிறவர்கள் மலப்பிணிப்பினின்றும் நீங்கி அவன் வீற்றிருக்கின்ற எல்லா உயிர்களிடத்தும் அன்புடன் ஒழுகி நலஞ்செய்து உலகில் வாழ்வார் என்ற உண்மையைக் கூறி அருளினார். ஏனையோர் அங்ஙனம் ஒழுகி வாழார் என்பது தானே போதரும். இந்த உண்மைக்கு இக்கால உலகிலுள்ள பெரும்பான்மையர் சான்றுகளாய் அமைந்துள்ளார்.

--மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

பொய்யாக மருள்கொண்டு ஆடும் பொல்லாத மாந்தர்களே உயிர்ப் பலியிடவேண்டும் என்று சொல்லிப் பழிக்குந் தீவினைக்கும் ஆளாகி இவ்வுலகத்திலும் மேலுலகத்திலுஞ் சிவபெருமானால் ஒறுக்கப்படுகின்றார்கள்.

—மறைமலையடிகள்.

ஆராய்ச்சிப் பகுதி-Research

கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும்

(சிலம்பு கங: பரல் கஉ: ருசரு-ம் பக்கத் தொடர்ச்சி)

கங்கைப்படலத்தில்.

நகர் நீங்கிக் கங்கையாற்றங்கரை வந்துற்ற கம்பராமனுக்கு ஆங்குவதிந்த முனிவர்கள்

காயுங் கானிற் கிழங்குங் கனிகளும்
தூய தேடிக் கொணர்ந்தனர் தோன்றனீ
ஆய கங்கை யரும்புன லாடினை
தீயை யோம்பினை செய்யமு தென்றனர்.—15.

ஆனல் கொடுவந்து கொடுத்தோர் முனிவரர்களாகையினாலே, அவர்கள் உண்ணும் மரவகையுணவை யுதவினரென இதனால் உணரத்தக்கதேயன்றி ஊனை உதவியிருந்தால் கம்பராமன் வேண்டாமென்றிருப்பானோ என்பதற்குச் சான்றாகாதெனச் சொல்ல இடமுண்டு. ஆனால் அதே கங்கைப் படலத்தில் குகனெனும் பெயர் நாவாயான் மீன்காணிக்கையுடன் வந்து கம்பராமனைக் கண்டபோது.

இருத்தியீண் டென்னலோடு மிருந்தில னெல்லைநீத்த
அருத்தியன் றேனுமீனு மமுதினுக் கமைவதாகத்
திருத்தினென் கொணர்ந்தேனென்கொல் திருவுள
மென்னவீரன்
விருத்தமா தவரைநோக்கி முறுவலன் விளம்ப லுற்றான். 41.

என்னென்று விளம்பலுற்றான்?

அரியதா முவப்பவுள்ளத் தன்பினா லமைந்தகாதல்
தெரிதரக் கொணர்ந்த வென்றால் அமிழ்தினுஞ்
சீர்த்தவன்றே
பரிவினிற் றழீஇயவென்னிற் பவித்திர மெம்மனோர்க்கும்
உரியன வினிதினாமு முண்டனெமன்றோ வென்றான். 42

அதாவது மீனூனை வாயாலுண்ணாமல் உள்ளத்தாலுண்டானென்ப.

இதனாலும் கூடக் கம்பராமன் ஊனுணாதவனென்று கோடற்குப் போதாது, முனிவர்கள் முன்னிலையில் ஊனுண்ணக் கூசினானென்று எண்ணற்கிடனுண்டு.

ஆனால் குகப்படலத்தில் பிறன் கூற்றாக, என்னே? பரதன் கூற்றாக,

இயன்றதென் பொருட்டினாலிவ் விடருனக் கென்றபோழ்தும்
அயின்றனை கிழங்குங்காயும் அமிர்தென வரியபுல்லில்
துயின்றனை யெனவும்ஆவி துறந்திலென் சுடருங் காசு
குயின்றுயர் மகுடஞ்சூடும் செல்வமுங் கொள்வன்யானே.—40.

கம்பராமன் கிழங்குங்காயும் உண்டு வதிந்ததாக இருக்கிறது. ஆனால் பரதனுக்குக் கேள்வியாற் றெரிந்ததே யன்றி நேராகத் தெரிந்த தன்றாகலின் கேள்விச் சான்று சான்றாகா (Hearsay evidence is no evidence) என்று கொள்ளற்கிடனுண்டு.

இன்னும் அணுக்கத்தனான இலக்குவன் கூற்றைக் கேட்போம்.

கிட்கிந்தைப்படலத்தில் வருவலென்று றுதிகூறிச் சென்று மதுவுண்டு வெறிகொண்டு காலந்தாழ்த்த சுக்கிரீவனை யழைக்கச் சீற்ற மேற்கொண்டு சென்றணைந்த இலக்குவனுக்குத் தன்னினைவு வரப்பெற்ற சுக்கிரீவன் தான் நுகர்வகை யுணவு இலக்குவனுக்கு அளித்தலும், இலக்குவன்

"பச்சிலை கிழங்கு காய்பர னுங்கிய
மிச்சிலே நுகர்வது வேறுதா னென்று
நச்சிலே னச்சினே னுயினு யுண்ட
எச்சிலே யதுவிதற் கேது வில்லையால்"

என்றும்

"அன்றியு மொன்றுள தைய யானினிச்
சென்றனென் கொணர்ந்திடை திருத்தி னலது
நன்றுணைக் கோமக னுகர்வ தாதலால்
இன்றுறை தாழ்த்தலு மினிதன் றாமென்றான்" 115

இக்கூற்றுகளில் மரவகையுணவே இராம இலக்குவர் காட்டிலருந்தின ரென்பதை மேலும் மேலும் வற்புறுத்தப் பட்டிருக்கிறது.

பண்டை ஆரிய ஒழுக்கம் ஊன்றின்பதேன்பது.

8. உண்மையில், வால்மீகி காலத்தில் வடநாட்டில் ஆரிய வகுப்பின் நால்வகைச் சாதியாரும், ஊன் தின்னும் வழக்கம் மாத்திரமல்ல, தென்புலத்தார் (பிதுரர்கள்) களுக்கும் ஊன்வைத்துப் படைக்கும் வழக்கத்தினர் என்பதும், ப்ராஹ்மணர் முதலாயினோர் இன்னின்ன ஊன் தின்னலாம், இன்னின்ன தின்னலாகாதென்பதும், தென்புலத்தாருக்கு

எந்தெந்த ஊன் அவி கொடுத்தால் எத்தனை யெத்தனை ஆண்டுகளுக்கு அவர்களுக்கு ஆறுதலுண்டு என்பதும்போன்ற விவரங்கள் மனுஸ்ம்ருதி முதலிய நூல்களில் சொல்லியிருப்பது நுங்கட்குத் தெரியுமன்றோ? அன்றியும் இராமன் ப்ராஹ்மணனுமன்று. அக்காலத்திலும் இக்காலத்திலும் பிற்காலத்திலும் ஊன் தின்ற தின்கிற தின்னும் க்ஷத்திரியனன்றோ ?

வெள்ளக்கணக்கான அரக்கர் படைகளைக் கொல்லப் போன இராம இலக்குவர் மரவகையுணவு உண்டனரென்று கம்பன் புளுகுவானேன்? ஓரிடத்திற் புளுகியதா? அல்ல.

"பொய் சொல்லின் பொருந்தச் சொல்" என்னும் வழக்கிற்கு ஏற்க, யான் முன் எடுத்துக் காட்டியவாறு புளுகத் துவக்கிய கம்பன் தன் இராமாயண நெட்டிலும் பொருந்தப் புளுகிக் கொண்டு போகின்றனனா? அல்லது

"மூவரானவர் தம்முளு முந்திய நாவினுருரையின்படி" சொல்லிப்போகின்றனனா, நீங்களே பாருங்கள்.

இராமன் ஊன்றின்பதில் ஊக்கமுடையவனேன்பது வால்மீகி வாய்மை மோழி.

9. வால்மீகியோ உள்ளதை உள்ளபடியும் உணர்ந்ததை உணர்ந்தபடியும் கூறும் வாய்மையுடையவர். அதனாற்றான் இயற்கை நவிற்சி அவர் நூலிற் பொலிகின்றது.

அயோத்யாகாண்டத்தில் 20-வது சர்க்கத்தில் காட்டிற்குப் போம்படிக் கைகேசியால் ஏவப்பட்ட இராமன், நேர்ந்ததின்னும் உணராதிருந்த தன் அன்னை கோசலையிடம் சென்று,

"*மக்களில்லாக் காட்டில் பதினான்கு ஆண்டுகள் வதியப் போகின்றேன், துறவியைப்போல ஊனைவிட்டுத் தேன் வேர் கனிகளால் உயிர்வகித்திருக்க வேண்டியே பேரரையர் (தசரதர்) இளவரசுப்பட்டத்தைப் பரதனுக்குக் கொடுத்து விட்டார்"

என்று உற்றதுணர்த்தினான்.

இக்கூற்றிலும், இளவரசுப்பட்டம் போனதை முதல் சொல்லாமல், காட்டில் வதிய வேண்டியதையும் ஊன்றின்பது போனதென்பதையும் முன்னர் மொழிந்தபடியால் இராமனுக்கு இளவரசுப்பட்டம் போனதைவிட ஊன்றின்பது போனது பெரிதாக உறுத்திற்றென்று வெறுங்குறும்பினர்

---

* அயோத்தியாகாண்டம் 52-வது சர்க்கம்: சுலோகம் 102

பழிப்பர். அஃதன்று; தனக்குற்ற இடுக்கணைத் தாய்க்குணர்த்தவந்த இராமன், இடி வீழ்த்துவதுபோல எடுத்த எடுப்பில் இளவரசுப்பட்டம்போயிற்றென்றால், அத்தாய் எவ்வளவு வருந்துவள்! அவ்வாறு திடுக்கென்று வருத்தம் தோன்றாதபடி, காட்டிற்குத் தான் போவதை முன்சொல்லிக் காட்டில் மக்களில்லாத் தன்மையைப் பின்னுணர்த்தி, துறவிகள்போல ஊன்மறுக்க வேண்டியதை அதன்பின்னுணர்த்தி, வேறு யார்க்குமல்ல அடுத்த மகனாகிய பரதனுக்கென்று துவக்கி, மகாராசா என்று தொடர்ந்து, எதுபற்றியென்றெழும் ஐயப்பாட்டை யுண்டாக்கி, அதன்பின் இளவரசுப்பட்டத்தைப் பற்றியென்றுணர்த்தி, இறுதியில் கொடுத்துவிட்டார் என்று கோசலை மனதை வருத்த மேற்கும் வண்ணம் சிறுகச் சிறுகப் பண்படுத்தி மொழிந்த அருமை யழகு வால்மீகியின் கவித்திறத்தையும் வாய்மையையும் காட்டும்.

ஆனால், ஊன்றின்பதை ஒழிக்க வேண்டியதாகக் கோசலை மனதைப் பண்படுத்த வேண்டிக் கூறியதை யன்றி உள்ளபடி ஊன்றின்பதை இராமன் முதலிய மூவர் நீக்கினரென்று வால்மீகி புளுகினரல்லர்.

நாட்டிற் கிடைக்கும் ஊனைவிடக் காட்டிற் கிடைக்கும் ஊன்றான் பல்வேறு வகையதென்றும், நோயற்றதென்றும், சுவையுற்றதென்றும், தரையிற் படர்ந்து கிடக்கும் உப்பும், உதிர்ந்து கிடக்கும் சருகும், நெருப்புண்டாக்கக் காடெங்கும் கிடைக்கும் சக்கிமுக்கிக் கல்லும் கொண்டு, அடுவதற்குப் பாண்டங்களும் வேண்டாமல், இப்பெருங் குழுவிற் குவங் துறைவோர் நாளொன்றிற்குச் செலுத்த வேண்டிய சிறு தொகை ஒரு ரூபாவும் வேண்டாமல், நெருப்பில் வாட்டி வயிறுறத் தின்னக்கூடியதென்றும் வேடராயிருந்து நன் குணர்ந்து பின் மகரிஷியான வால்மீகிக்குத் தெரியாததல்ல.

வெள்ளக்கணக்கான அரக்கர்களைக் கொல்லச் செல்லுமிவர்கள் ஆட்டு மாட்டுத் தீனி தின்று சென்று ஆற்றக்கூடியது மல்லவென்றும் வால்மீகி யுணராதாரல்லர். நாடு விட்டுக் காடு புகுந்த முதனாள் உணவிற்கு இராமன் முதலிய மூவர் என்ன செய்தார்களென்பதுபற்றி வால்மீகி வாய்மை புகல்கின்றார்:—

"*அவர்கள் அவ்விடத்தில் பன்றி, கலைமான், புள்ளிமான், கருப்புக் கலைமான் ஆகிய நான்கு பெரிய விலங்குகளைக் கொன்று, சிறந்த அவைகளை எடுத்துக்கொண்டு உண்ண

* அயோத்தியா காண்டம் 52-வது சர்க்கம்; ஸ்லோகம் 102

விரும்பியவர்களாய் விரைவான காலத்தில், காட்டரசாய் நிற்கும் ஆலமரத்தினடிக்குச் சென்றார்கள்.''

அவ்வாறு கூறுவதிலும் வால்மீகி ஊன்றிற முணர்ந்தவராகையினாலே, மிகுதியாக வபை (வயிற்றடிக்கொழுப்பு)யை உடையதும் வாட்டிய ஊன் வெண்ணை போன்று வாயிற் கரையும் மென்மையுடையதுமாகிய பன்றியை (வராகம்) முதற்கண்ணும், அடுத்தபடியான கலைமானை (ருஷ்யம்) யதன்பின்னும், தசையை உலர வைத்துப் பின்னுண்ணக் கூடியதும் தாழ்வாய்த் தசைநார்களுக்குப் பயிற்சி கொடுப்பதுமாகிய புள்ளிமான் (ப்ருஷதம்) கருப்புக் கலைமான் (மஹாருரும்)களை அதன் பின்னும் முறையே வைத்துக் கூறினாரென்க. ஆனால் அவ்வழகு நுங்கட்குத் தெரியவே தெரியாதென்பது சொல்ல வேண்டுமோ?

அன்றியும் உள்ளுறைப் பொருள் அழகும் வைத்துக் கூறினாரென்னலாம். எற்றெனின், தன் முன் அவதாரமாகிய வராகத்தைச் சுட்டி இராமனையும், கண்ணழகிய கலைமானைச் சுட்டிச் சீதையையும், புள்ளிமானைச்சுட்டி மயக்கவந்த மாரீசனையும், கருப்புக் கலைமானைச் சுட்டிக் கரிய இராவணனையும் குறித்தாரென்று கொள்ளவும் அமையும்.

கம்பன் புளுகியது முழுக்குற்றமானால் அதிற்பாதியாவது உங்கள் சைவபரம்பரைக்குண்டு. அதாவது, அவன் புளுக ஊக்கிய குற்றம் (Abetting) உங்களுடையது; ஏனெனில், கம்பன் காலத்தில் மிதந்து பரவியிருந்த நுங்கள் பரம்பரையார் கம்பன் நூலைப் படித்து வாய் புண்ணாகாதபடி, கேட்டுச் செவி புண்ணாகாதபடி, நினைத்து மனம் புண்ணாகாதபடி இராமனையே கம்பன் சைவனாகப் புளுகியிருத்தல் கூடும்.

உங்களுக்கினிக்கப் பொய்யுரை கம்பன் புகன்றதை,

"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என்று "போற்றவும் போற்றுவீர்"—அதைக் குற்ற மென்றெடுத் தியம்பும் என்னைத் "தூற்றவும் தூற்றுவீர்"

ஆனாலும் உங்கள் இறைவன் சீற்றத்திற்கும் அஞ்சாத தமிழர் வழித்தோன்றிய யான் உங்கள் சீற்றத்திற்கும் அஞ்சாது கம்பன் புளுகியது "குற்றம் குற்றமே" என்பேன்.

அவன் பொய்மை நன்மை பயப்பதற்கு மாறாக அளவற்ற தீமை பயந்ததென்று கண்கூடுபடுத்த வேண்டிய சான்றுகளுண்டு.

கம்பராமன் அசாத்திய குண ராமனுகக் கம்பனுல் புளுகப் பெற்றுனேனென்பது.

10. ஊன்திண்டி ராமனைக் கம்பன் சைவ ராமனுக்கியது மாத்திரமா? வால்மீகி வாய்மை தவறுது வரைந்த இயற்கைக் குணங்களுடைத் தாயிருந்த சாத்திய ராமனைக் கம்பன் புளுகில் செயற்கை யெல்லையையும் கடந்த அசாத்திய ராமனுக்கினன்.

எடுத்துக் காட்டுகள் இரண்டொன்று இயம்பல் சாலும்.

கைகேசி சூழ்வினைப் படலத்தில்

முடி சூடுவதற்கென வந்துகொண்டிருந்த இராமன் முன், கைகேசி தோன்றி,

ஆழிசூ ழுலகமெல்லாம் பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைகடாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கானநண்ணிப் புண்ணியத் துறைக ளாடி
எழிரண் டாண்டின்வாவென் றியம்பின னரச னென்றுன். 107

அடுத்த ஓரையில் நாடாள்வோமென வரும் இயற்கை ராமனுக்குத் திடுக்கென்று பதினுன்கு ஆண்டுகள் காடாளப் போவென்று சொன்னது மாத்திரமல்ல, தரையில் விழும்படியான சடைகள் தாங்க வேண்டியதொன்றும், அணித்தில் கடிமணம் புரிந்த இளங்காளை, தவம் மேற்கொள்ள வேண்டியதொன்றும், இன்னபிறவுமான கொடுங் கடுங்கட்டளைகளைக் காதிற் கேட்ட கம்பராமன் எவ்வாறிருந்தானெனக் கம்பன் பச்சைப் புளுகு புளுகுவதி யாதெனின்,

கைகேசி சூழ்வினைப் படலத்தில்

இப்பொழு தெம்மனோரா லியம்புதற் கெளிதோ யாரும்
செப்பருங் குணத்திராமன் திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்புபின்பவ் வாசக முணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்தசெந்தா மரையினை வென்ற தம்மா. 108

தெருளுடை மனத்துமன்ன னேவலிற்றிறம்ப வஞ்சி
இருளுடை யுலகந்தாங்கு மின்னலுக் கியைந்து நின்றுன்
உருளுடைச் சகடம்பூண்ட வுடையவ னுய்த்த காரே
அருளுடை யொருவனீக்க வப்பிணி யவிந்த தொத்தான். 109

மன்னவன் பணியன்ருகி னும்பணி மறுப்ப னேவென்
பின்னவன் பெற்றசெல்வ மடியனேன் பெற்ற தன்றே
என்னினியு றுதியப்பா லிப்பணி தலைமேற் கொண்டேன்
மன்னெளிர் கானமின்றே போகின்றேன் விடையுங்
கொண்டேன். 110

என்று கம்பன் புளுகினுதித்த அசாத்திய ராமன் "அப்போ தலர்ந்த செந்தாமரை முகத்துடன்" விடைகொண்டு சென்றானும். அம்மட்டுமன்று; கம்பராமனும் கம்பகோசலையும் அளவளாவிய பெரும்புளுகையும் கேளுங்கள்.

நகர் நீங்குபடலத்தில் கம்பராமன், கோசலை கோயிலில்,

குழைக்கின்ற கவரியின்றிக் கொற்றவெண் குடையு மின்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம்பின் னிரங்கி யேக
மழைக்குன்ற மனையான் மௌலி கவித்தனன் வருமென் றென்று
தழைக்கின்ற வுள்ளத் தன்னாள் முன்னொரு தமியன் சென்றான்.

அதுகண்டு கம்ப கோசலை :—

புனைந்திலன் மௌலி குஞ்சி மஞ்சனப் புனித நீரால்
நனைந்தில னென்கொலென்னா மையத்தா ணளின பாதம்
வனைந்தபொற் கழற்கால் வீரன் வணங்கலுங் குழைந்து வாழ்த்தி
நினைந்த தென்னிடையூ றுண்டோ நெடுமுடி புனைதற் கென்றாள்.

அதாவது, அப்போ தலர்ந்த ராமத் தாமரையை இள ஞாயிற்றின் கதிர்கள் பனிநீர் கலந்து தாவக் குளிர்ந்த கோசலை தாமரை கேட்டனளாம்.

கோசல "மங்கையம் மொழி கூறலும்" கம்பராம "மாணவன்

செங்கை கூப்பிநின் காதற் றிருமகன்
பங்கமில் குணத் தெம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின்றா னென்றான்" 4

அது கேட்ட குளிர்தாமரைக் கம்பகோசலை

"முறைமை யன்றென்ப தொன் றுண்டு மும்மையின்
நிறைகுணத் தவ னின்னினு நல்லனால்
குறைவி லன்னெனக் கூறினா ணால்வர்க்கும்
மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினாள்" 5

ராமன் கோசலை இயற்கையுணர்ச்சிகளை வால்மீகி உள்ளதுள்ளபடி நவிலுகின்றாரேனல்.

11. கம்பன் புளுகு இவ்வாறாக "மூவரானவர் தம் முழு முந்திய நாவினார்" வாய்மையே கூறும் வால்மீகி சொல்வது கேளுங்கள்.

"இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்"
வால்மீகியின் மாண்பு.—

"செயற்கைப்பொருளை ஆக்கமின்றி கூறல்"
கம்ப சூத்திரம்.—

சொக்கட்டான்

[இராவ்சாஹிப் C. M. இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள்]

சொக்கட்டான் என்பது ஒரு சூதாட்டக் கருவி. சூதாட்டம் எல்லாத் தேசங்களிலும் எல்லாக் காலங்களிலும் இருந்திருக்கிறது. இந்தக் காலத்தில் தான் ஏற்பட்டது, இன்னார் தான் இதனை ஏற்படுத்தினார்கள் என்று சொல்லமுடியாது. மனிதனுடைய குணத்தில் நல்லது கெட்டது என்ற இரண்டுமுண்டு. கெட்டது என்ற வகையில் மோசடி, பேராசை, முதலியவை உண்டு. யாதொரு உழைப்பும் அடையாமல் பொருள் தொகுக்க வேண்டும் என்றும், பிறருடைய பொருளை எந்த வகையிலாவது தான் கொள்ளல்வேண்டும் என்றும் இயல்பாகக் கெட்ட மனிதனுடைய எண்ணத்தில் தோன்றுவதுண்டு. அவ்வகை எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக மனிதன் பலவகைச் சூழ்ச்சிகளை ஆராய்ந்து பார்ப்பான். அவ்வகைச் சூழ்ச்சிகளில் முதன்மையானது சூது. நேர் வழியில் நின்று பொருளைச் சம்பாதிக்க முடியாமல் போனாலும், எதிரில் நின்று பகைவனை வெல்லமுடியாமல் போனாலும், வஞ்சனையாலே தன் வினைகளை முற்றுப்பெறுவிக்க மனிதன் எண்ணுவதுண்டு. மெய்ப்பொருள் நாயனாரை நேராகப் போர்முனையில் வெல்லமுடியாத முத்திநாதன் என்பவன் வஞ்சனையாகச் சிவனடியார் வேடம் பூண்டு, கத்தியைக் கவளிகையில் ஒளித்து வைத்துக்கொண்டு அவரிடம் தான் உபதேசிக்க வந்ததாகச் சொல்லி, அவர் வணங்கும்போது குத்திக் கொன்று விட்டான். இதனால் நேரில் வெல்லமுடியாதவன் சூதாகத் தன் காரியத்தை அடையும் வகையை அறிகிறோம். மேலும் துரியோதனாதிகள் பாண்டவர்களைப் போரில் வெல்ல முடியாததைக் கண்டு தங்களுடைய மாமனாகிய சகுனியின் உதவியாலே சூதாட்டம் ஆடச் செய்து நாடுநகரம் முதலியவற்றை எல்லாம் கவர்ந்துகொண்டதைப் படித்திருக்கிறோம். புஷ்கரன் நளன்மீது எதிர்த்துச் செல்ல அஞ்சிச் சூதாட்டத்தினால் அவன் நாட்டினைக் கவர்ந்ததையும் வாசித்திருக்கிறோம். ஆகவே வஞ்சனையாகப் பொருள்களைக் கவர்ந்துகொள்வதும் அதற்காகச் சூதாட்டத்தைப் பயன்படுத்திக் கொள்வதும் பழையகாலம் முதற்கொண்டு வழங்கிவந்த செய்கைகளாகும். இவ்வகை வஞ்சனை செல்வர்களிடத்திலும் ஏழைகளிடத்திலும் இருக்கக் காணலாம். நாகரிகம் பெற்ற சாதியார்களிலும் நாகரிகமில்லாத காட்டுமிராண்டிகளிடத்திலும் இருக்கக் காணலாம். ஆகவே, சூதின் உற்பத்தி மனிதனுடைய இயல்புகளிலுள்ள கெட்ட தன்மையே ஆகும்.

சூதாட்டத்தில் ஆடப் பயன்படும் கருவிக்குச் சொக்கட்டான் என்று பெயர். இதனைக் கவறு, தாயக்கட்டை, பாய்ச்சி, பாச்சிகை, சொக்கட்டான்காய், வல் முதலான பல மொழிகளால் தமிழில் வழங்குகிறார்கள். இவற்றில் கவறு என்பது புலவர்கள் அதிகமாய் எடுத்தாளும் சொல்லாகும். வில்லிபுத்தூரார், புகழேந்திப் புலவர் முதலான பெரும்புலவர்கள் கவறு என்னும் சொல்லை எடுத்தாண்டு கவறாடுதலுடைய கொடுந்தன்மையை வெகு உருக்கமாக எடுத்துக் காட்டி இருக்கின்றனர். கவறாடுதலின் தீமைகளைப் புகழேந்தியார் சொல்லியிருக்கும்,

காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
ஈதன் மறுத்த லிவைகண்டாய்—போதிற்
சினையாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி.

அறத்தை வேர்கல்லு மருநரகிற் சேர்க்குந்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும்—மறத்தையே
பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ வென்றார் தெரிந்து.

உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கு மானஞ் சிதைக்கு—மருவும்
ஒருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து.

இவ் வெண்பாக்களில் கண்ட உருக்கமான உரையைக் காட்டிலும் சிறந்தவொன்றை வேறு யாரால் எடுத்துக்காட்ட முடியும்? மேலும், எத்தனை நல்ல குணத்தோடு இருந்தவன் எனினும் சூதிற்புகுந்த பிறகு அதை விட்டு விலக முடியாமல் அதில் அவன் சிக்கிக்கொள்ளுவான். தோற்றவன் தான் செய்தது தவறு என்று தெரிந்தும் இனிமேல் வெற்றியடைய முடியும் என்ற மனோபாவனையால் ஆட்டத்தை விட்டு விலகாமல் தவிப்பான். தருமபுத்திரன் சூது தவறானது என்று தெரிந்தும் ஒன்றன்பின் ஒன்றாகத் தோற்றுவந்தான்; இறுதியில் எவராலும் நினைக்கவுமுடியாதபடி தன் மனைவியையும் பணயம் வைத்துத் தோற்று விட்டான். சூதாட்டத்தைவிட மனிதனைப் பிடித்துந்தும் வன்மை ஒன்றை வேறு எங்கு காண்போம்? கள்குடித்தல் தீது தீது என்று தெரிந்தும் அதன்மீது குடிப்பவனுக்கு எவ்வாறு விருப்பம் அதி

கரிக்குமோ, அவ்வாறே சூதாடுபவனுக்கும் விருப்பம் மிகும். இதனையே வில்லிபுத்தூரார்,

'மருவரும்பு யத்தலங்கள் மாமன்வெல்ல மன்னருள்
வெருவருங்க ளிற்றினனு மேல்விருப்ப மிஞ்சினன்'

என்று விருப்பம் மிஞ்சுவதை அழகாக எடுத்துக்காட்டுகின்ருர். சூதாட்டத்தில் எல்லாம் தோற்று ஓட்டாண்டியாகப் போகும் மனிதனுடைய மனோபாவமும், பரிதாப நிலையும் பாண்டவரிடத்தில் காணலாம். தன் மனைவியைப் பிறனொருவன் மானபங்கம் செய்வதைக் கண் எதிரில் பார்த்திருந்தும் சிறு விரலையும் அசைக்க முடியாத கேவல நிலைமையிற் சிறப்புப்பெற்றபோர் மன்னர்கள் இருந்தால், இதைவிட நெஞ்சழிவிற்கு வேறு என்ன காரணம் இருக்கிறது? பாண்டவர்கள் இக்கதியை அடைந்ததை அறிந்த இக்காலத்து மக்களும் சூதாட்டத்தில் தம் வாழ்நாள் முழுவதும் கழிப்பது வியப்பாகத் தோன்றுகிறதல்லவா? மிகக் கேவல நிலைமையைச் சூதாட்டத்தின் காரணத்தினல் அடைந்த அறம் தெரிந்த தருமபுத்திரன், பின்னல் விராட ராஜனுடன் ஏன் சூதாட வேண்டும்? அவ்வாறிருக்கையில், சாதாரண மனிதர்கள் சூதாட்டத்தில் சிக்கி அலைமோதுவதில் என்ன ஆச்சரியம்? இதே சூது மனிதனைக் கவர்ந்துகொண்டிருக்கும் மோகத்தின் சக்தியை வெளிப்படுத்துகிறது.

மேலே சூதாட்டக் கருவிகளின் பெயர்களைக் கொண்ட பதங்கள் பல கூறினோம். ஒரு பொருளுக்கு இத்தனைப் பதங்கள் ஏற்படுவதே அப்பொருள் கொண்ட ஆட்டம் மக்களிடத்தில் அதிகமாகப் பரவியிருந்தது என்பதற்குச் சான்று ஆகும். பொதுமக்கள் பாச்சிகை, சொக்கட்டான் என்ற பதங்களைப் பொதுவாக வழங்குகின்ருர்கள். புலவர்கள் வல் என்ற பதத்தினலும் அதைக் குறித்திருக்கிருர்கள்.

சூதாட்டக் கருவியின் பெயர்கள் நிகண்டுகளிலும் அகராதிகளிலும் அதிகமாகப் பிரயோகிக்கப் பட்டிருப்பதைக் காணலாம். சூதிற்கு வடமொழியில் 'த்யூதம்' என்று பெயர். அப்பதத்திலிருந்தே தமிழ் மொழியாகிய சூது என்பது வந்தது எனலாம். *பாச்சிகை என்பதும் வடமொழியிலிருந்து வந்தது தான். சொக்கட்டான், கவறு, வல் என்ற இவைகள் தூய தமிழ் மொழிகள். சோணு

* பாச்சிகை என்பது பாய்ச்சு என்பதிலிருந்து பிறந்த தமிழ்ச் சொல்லாதல் வேண்டும். சொக்கட்டான் ஆடுங்கால் "நன்ருகப் பாய்ச்சிப் போடு" என்று கூறும் வழக்காற்றை நோக்குக.

என்ற பதம் தெலுங்கு. மற்ற இந்திய மொழிகளிலும் இக் கருவியின் பெயரைக் காணலாம். சொக்கட்டான் மணையை (பலகை) ஹிந்தியிலும், பாரசீகத்திலும் 'சௌபட்' (चौपड) என்பார்கள். பாரசீக நாட்டிலும் அரேபியாவிலும் இவ்வாட்டம் மிகுதியாக இருந்தது. 'பாகோ பாஹர்' என்று சொல்லும் நான்கு சந்நியாசிகள் கதையில் 'சௌபட்' என்னும் இந்த ஆட்டத்தைப்பற்றிக் கூறியிருக்கிறது. மேலும் 'குலே பகாவலி' என்று சொல்லும் பாரசீகக் கதையிலும் நான்கு அரச புத்திரர்கள் லக்பேஷ்வா என்ற ஒரு தாசியிடம் சூதாடித் தம் பொருளை எல்லாம் தோற்று விட்டதாகக் காண்கிறோம். இந் நூலினால் அநேக நூற்றாண்டுகளுக்கு மூந்தியே முகம்மதிய நாடுகளில் சொக்கட்டான் விளையாட்டு இருந்ததை அறியலாம்.

ஆங்கிலத்தில் சூதாடும் கருவிக்கு (Dice) டைஸ் என்று பெயர். அக்கருவிகள் எலும்புகளாலும் தந்தத்தினாலும் செய்யப்படும். அவைகள் கன அளவை கொண்டவைகள். ஒவ்வொன்றிற்கும் 6 சதுரங்கள் உண்டு. ஒன்று முதல் ஆறு வரை கரும்புள்ளிகள் பொறித்திருப்பார்கள். சாதாரண சூதாட்டத்தில் இரண்டு கருவிகளைக் கொண்டு ஆடுவார்கள். ஆடினவர்கள் அக்கருவிகளைக் குலுக்கி நிலத்தில் எறிவார்கள்; அதில் சொன்ன தொகை விழுந்தால் அவன் ஜெயிப்பான். இல்லாவிடில் தோற்பான். இதற்காகப் பந்தயங்கள் கட்டுவதுண்டு. மனிதனுடைய புத்தியை உபயோகப் படுத்தாமல் எதிர்ச்சையாக முடிவு ஆவதனால் இதனைச் சூது என்பார்கள். இங்கிலாந்திலே இக்கருவிகளை உபயோகிக்கும்போது ஒரு சிறு பெட்டியில் அவைகளைப் போட்டுக் குலுக்கி எறிவதுண்டு. கருவிகள் ஒழுங்கான அளவோடு செய்யப்பட்டிருந்தால் இன்னது தான் விழும் என்று எவனாலும் சொல்ல முடியாது. ஆனால் ஏமாற்றுவதற்காகச் சிலர் ஒருபுறம் கனமாகவும் மற்றொரு புறம் இலேசாகவும் கருவிகளைச் செய்வதுண்டு. அவ்விதம் செய்வதினால் மோசடி அதிகமாகும். இதனைத் தடுப்பதற்காக இங்கிலாந்து தேசத்திலே ஜார்ஜ் IV அரசன் காலத்தில் Act 9 Chap. 18 என்ற ஒரு சட்டத்தை ஏற்படுத்தினார்கள். அச்சட்டத்தின்படி சூதாட்டக் கருவிகள் ஒரு ஜோடிக்கு 20 ஷிலிங்கு வரியிட்டு, அதன்மேல் முத்திரை வைக்கவேண்டும் என்றும், அவ்விதம் முத்திரை யிடாத கருவிகளை உபயோகித்தால் பெரும் அபராதம் விதிக்கப்படும் என்றும், விதிக்கப்பட்டது. என்றாலும் சட்ட விரோதமாகச் சூதாட்டக் கருவிகள் அநேகம் செய்யப்பட்டன. ஆகவே 1862-ல், சூதாட்டக் கருவிகளின் மீதிருந்த வரியை எடுத்து விட்டார்கள்.

(தொடரும்)

இலக்கணமும் இலக்கியமும்:
LANGUAGE AND LITERATURE

திருவள்ளுவர்

[ஆசிரியர் மறைமலையடிகளார்]

(சிலம்பு-கங, பரல்-கஉ, ௫௫0-ம் பக்கத்தொடர்ச்சி)

இனித் திருவள்ளுவனாரோடு ஒரு வயிற்றிற் பிறந்த கபிலர் என்னும் அந்தணர் பெருமான் தமது வரலாற்றினைத் தங்குடியினரான பார்ப்பனருக்குத் தெரிப்பான் வேண்டி இயற்றிய அகவலில்,

"அருந்தவ மாமுனி யாம்பக வற்குக்
கருவூர்ப் பெரும்பதிக் கட்பெரும் புலைச்சி
ஆதிவ யிற்றினில் அன்றவ தரித்த
கான்முளை யாகிய கபிலனும் யானே,
என்னுடன் பிறந்தவர் எத்தனை பேரெனில்,
ஆண்பால் மூவர் பெண்பால் நால்வர்,
யாம்வளர் திறஞ்சிறிது இயம்புவல் கேண்மின்!
ஊற்றுக் காடெனும் ஊர்தனிற் றங்கியே
வண்ணார் அகத்தினில் உப்பை வளர்ந்தனள்,
காவிரிப்பூம் பட்டினத்திற் கள்விலைஞர் சேரியில்
சான்றார் அகந்தனில் உறுவை வளர்ந்தனள்,
நரப்புக் கருவியோர் நண்ணிடு சேரியிற்
பாணர் அகத்தினில் ஔவை வளர்ந்தனள்;
குறவர் கோமான் கொய்தினைப் புனஞ்சூழ்
வண்மலைச் சாரலில் வள்ளி வளர்ந்தனள்,
தொண்டை மண்டிலத்தில் வண்டமிழ் மயிலையில்
நீளாண்மை கொளும் வேளாண் மரபுயர்
துள்ளுவ ரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர்,
அரும்பார் சோலைச் சுரும்பார் வஞ்சி
அதியன் இல்லிடை அதியமான் வளர்ந்தனன்,
பாரூர் நீர்நாட் டாரூர் தன்னில்
அந்தணர் வளர்க்க யானும் வளர்ந்தேன்."

என்று தம் தாய்தந்தையர் ஆதியும் பகவனும் ஆவரெனவுந், தம்முடன் பிறந்தவர் உப்பை உறுவை ஔவை வள்ளி எனப் பெண்பால் நால்வரும், வள்ளுவர் அதியமான் கபிலர் எனத்

தம்மைச் சேர்த்து ஆண்பால் மூவரும் ஆவரெனவுங் கூறும் இதனினும் மிக்கதொரு சான்று பிறிதின்மையிற் றிருவள்ளுவரின் பெற்றோர் ஆதியும் பகவனுமே யென்றலிற் சிறிதும் மாறுபாடில்லை யென்க.

இனி, இக்கபிலரகவல் எளிய தமிழ்நடையில் இயற்றப்பட்டிருத்தல்கொண்டுங், கபிலர்க்குப்பூணூல்இட ஒருப்படாத பார்ப்பனக் குழுவினர்க்கு அறிவு தெருட்டல்வேண்டிச் சிறுபிள்ளையாயிருந்த கபிலர் இதனைச் செய்தாரென வழங்குங் கதை நம்பத்தகாததாயிருத்தல் கொண்டும் இது கபிலராற் செய்யப்பட்டதன்றென்றும், இஃதொரு "கட்டுநால்" என்றுங் கூறினருமுளர். இக்கபிலரகவல் இயற்றப்பட்டதற்குக் காரணங் கூறுங் கதை நம்பத்தகாததுபற்றி இந்நூலையே கட்டுநூலென்றல் ஆராய்ச்சி யுணர்வில்லாதார் கூற்றாகும். கல்வி நலம் மனநலம் ஒழுக்கநலம் முதலியவற்றை நோக்காது, இந்நலங்கள் இல்லாரையும் பிறப்பளவில் உயர்த்துதலும், இந்நலங்கள் உடையாரையும் பிறப்பளவில் இழிவுபடுத்துதலுஞ் செய்துபோந்த அஞ்ஞான்றைப் பார்ப்பனமாந்தர்க்கு அறிவுகொளுத்தும் பொருட்டாகவே இவ்வரியநூல் கபிலரால் இயற்றப்பட்ட தென்பதுமட்டும் மறுக்கப்படாததாகும்; இதற்கு அகச்சான்றாகப்போந்த,

"பார்ப்பன மாந்தர்காள் பகர்வது கேண்மின்!
இறந்தவராய் உமை இல்லிடை யிருத்திப்
பாவனை மந்திரம் பலபட உரைத்தே
உமக்கவர் புத்திரர் ஊட்டின போது
அடுபசி யாற்குலைந் தாங்கவர் மீண்டு
கையேந்தி நிற்பது கண்டதார் புகலீர்!
அருந்திய உண்டியால் யார்பசி கழிந்தது?
ஒட்டியர் மிலேச்சர் ஊணர் சிங்களர்
இட்டிடைச் சோனகர் யவனர் சீனர்
பற்பல நாட்டினும் பார்ப்பார் இலையால்;
முற்படைப் பதனில்வே றாகியமு றைமைபோல்
நால்வகைச் சாதி இந்நாட்டில்நீர் நாட்டினீர்!
மேல்வகை கீழ்வகை விளங்குவது ஒழுக்கால்;
பெற்றமும் எருமையும் பிறப்பினில் வேறே,
அவ்விரு சாதியில் ஆண்பெண் மாறிக்
கலந்து கருப்பெறல் கண்ட துண்டோ?
ஒருவகைச் சாதியாம் மக்கட் பிறப்பினில்
இருவகை யாகநீர் இயம்பிய குலத்துள்
ஆண்பெண் மாறி யணைதலும் அணைந்தபின்

கருப்பொறை யுயிர்ப்பதுங் காண்கின் றிலீரோ?
எந்நிலத் தெந்தவித் திடப்படு கின்றதோ
அந்நிலத் தந்தவித் தங்குரித் திடுமால்,
மாறிவே றாகும் வழக்கம்ஒன் றிலையே;
பூசுரர்ப் புணர்ந்து புலைச்சியர் ஈன்ற
புத்திர ராயினோர் பூசுரர் அல்லரோ?
பெற்றமும் எருமையும் பேதமாய்த் தோன்றல்போல்
மாந்தரிற் பேதமாம் வடிவுஎவர் கண்டுளார்?
வாழ்நாள் உறுப்புமெய் வண்ணமோடு அறிவினில்
வேற்றுமை யாவதும் வெளிப்பட லின்றே;
தென்றிசைப் புலையன் வடதிசைக் கேகிற்
பழுதற ஓதிப் பார்ப்பான் ஆவன்;
வடதிசைப் பார்ப்பான் தென்றிசைக் கேகின்
நடையது கோணிப் புலையன் ஆவன்;

அதாஅன்று

சேற்றிற் பிறந்தசெங் கழுநீர்போலப்
பிரமற்குக் கூத்திவயிற்றிற் பிறந்த வசிட்டரும்,
வசிட்டர்க்குச் சண்டாளி வயிற்றிற்பிறந்த சத்தியரும்,
சத்தியர்க்குப் புலைச்சிதோள் சேர்ந்துபிறந்த பராசரும்,
பராசர்க்கு மீன்வாணிச்சி வயிற்றிற்பிறந்த வியாசரும்
வேதங்கள் ஓதி மேன்மைப் பட்டு
மாதவர் ஆகி வயங்கின ரன்றோ?''

என்னும் அக்கபிலரகவலின் அடிகளே அவ்வுண்மையைப் புலப்படுத்துவனவாம். சாதிவேற்றுமையென்பது இறைவனது அமைப்பிலேயே வடிவ வேறுபாடுடைய விலங்கினங்களுக்கே யல்லாமல், வடிவ வேறுபாடு சிறிதும் இல்லா மக்களுக்கு இசையாதென்பதை, மேற்போந்த அடிகளில் ஆசிரியர் கபிலர் எத்துணை நுட்பமாக எடுத்துக்காட்டியிருக்கின்றார்! ஆவும் எருமையும் இயற்கையமைப்பிலேயே எவ்வளவு வேறுபட்ட வடிவம் வாய்ந்தனவாயிருக்கின்றன! ஆவும் எருமையுந் தத்தஞ் சாதியிலுள்ள ஆணையே கூடிக் கருவுறுகின்றன அல்லாமல் மாறிக்கூடிக் கருப்பெறல் இல்லையன்றே! மற்று, மக்களெல்லாரும் ஒரே யியற்கை யமைப்பினை யுடையராயுஞ், செயற்கையாக வகுக்குப்பட்ட சாதிமுறையில் அடங்காது ஆண்பெண் மாறிக் கலந்து கருவுற்று அதனை உயிர்ப்பவராயும் இருத்தலை யறியாதார் யார்? இறைவன் இயற்கை யமைப்பிலேயே பார்ப்பனரை வகுத்தனனென்று அவர் கட்டிவிட்ட புராணகதை கூறுவது உண்மையாயின், இந்நிலவுலகத்தின் ஒருசிறு பகுதியாகிய இவ்விந்தியநாட்டின் மட்டுமே

யன்றி, மற்றை நாடுகள் எல்லாவற்றின்கண்ணு முள்ள மற்றை எல்லாமக்கட் குழுவுகளிலும் பார்ப்பனச்சாதியானது காணப் படுதல் வேண்டும்; மற்று, ஒட்டியர், மிலேச்சர், ஊணர், சிங்களர், சோனகர், யவனர், சீனர் முதலான மக்கட் கூட் டத்தாரிற் பார்ப்பனச்சாதி காணப்படாமையின் அவரது புராணக்கூற்று வெறும்பொய்யேயல்லால் உண்மையன்று என ஆசிரியர் அதனை எடுத்துக்காட்டி விளக்கிய திறம் பெரிது! பெரிது! மேலோர் கீழோர் என வழங்கும் வழக்கெல்லாம் அவரவர்தம் ஒழுக்கத்தின் உயர்வானும் இழிபானும் உண்டா யின பான்மையை "மேல்வகை கீழ்வகை விளங்குவது ஒழுக் கால்" என்றுஞ், "சிறப்புஞ் சீலமும் அல்லது, பிறப்பு நலந் தருமோ பேதையீரே" என்றுங் கபிலர் அறிவுறுத்தினாற் போலவே, இவர்தந் தமையனார் திருவள்ளுவரும்,

"ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்"

என்றும்,

"மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்"

என்றும்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால்"

என்றும்,

"மேலிருந்தும் மேலல்லார் மேல்லலர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர்"

என்றும் அருளிச் செய்திருத்தல் நினைவிற் பதிக்கற்பாற்று.

மேற்காட்டியவாற்றால் இக்கபிலரகவல் என்னுஞ் சிறந்த தமிழ் நூல், சாதியிறுமாப்புக் கொண்டு, தம்மவரல்லாத பிற ரிற்றோன்றிய சான்றோரை யெல்லாம் இழித்துக்கூறி, அவரது அறிவின் பயனை மக்கள் பெறவொட்டாது தடைசெய்யும் பார்ப்பனவகுப்பினர்க்கு அறிவு தெருட்டும் பொருட்டு ஆக் கப்பட்டதொன்றாதல் தெற்றென விளங்குதலின், இதனைக் கட்டுநூலென்றார் உரை மெய்ம்மை யுணராக் கட்டுரையே யாமென்க.

மேலும், ஊற்றுக்காட்டில் உப்பை என்னுந் தம் தமக்கை யார் பிறந்து ஒரு வண்ணாரகத்தில் வளர்ந்தமையுங், காவிரிப் பூம்பட்டினத்திற் கள்விற்பார் சேரியில் தம் மற்றொரு தமக்கை

யாரான உறுவை பிறந்து ஒரு சான்றார் வீட்டில் வளர்ந்தமையும், அப்பட்டினத்திலேயே யாழ் பயிலும் பாணச்சேரியில் ஓர் யாழ்ப்பாணரில்லில் தம் மற்றொரு தமக்கையாரான ஔவையார் வளர்ந்தமையும், வள்ளிமலையில் தினைப்புனஞ் சூழ்ந்த மலைச்சாரலில் தம் மற்றொரு தமக்கையாரான வள்ளி பிறந்து ஒரு குறவர் தலைவன் வீட்டில் வளர்ந்தமையுந், தொண்டை மண்டிலத்தின் கண்ணதான திருமயிலாப்பூரில் தந் தமையனாரான திருவள்ளுவர் பிறந்து ஒரு துளுவ வேளாளரிடத்தில் வளர்ந்தமையும், வஞ்சிமாநகரிற் றம் மற்றொரு தமையனாரான அதியமான் பிறந்து அதியமான் இல்லில் வளர்ந்தமையுங், கடைமுறையாக எல்லார்க்கும் இளவலாகிய தாந் திருவாரூரிற் பிறந்து ஓர் அந்தணர் இல்லில் வளர்ந்தமையும் நிகழ்ந்தன நிகழ்ந்தாங்கு எடுத்துக்கூறும் இவ்வுண்மை நூலைக் கட்டு நூலென்றார் உரையே பெருங்கட்டா யிருக்கின்றது!

மேலுந், தம்மை யுயர்த்தி மற்றை யெல்லா வகுப்பினரையும், வேசிமக்கள் அல்லது அடிமைகள் எனப் பொருள்படுஞ் "சூத்திரச்" சொல்லால் வழங்கும் பார்ப்பனரின் நூல்களாகிய "மிருதி"களையும் "புராணங்களை"யும் "வேதங்களை"யும் பார்ப்பனர்கள் தாமே எழுதிவைத்துக்கொண்டு, அவைகளைத் தாமெழுதிய நூல்கள் என்றால் அவற்றுள் நடுவிகந்து சொல்லியவைகளைப் பிறர் நம்பாரெனக் கருதி, அவைகளெல்லாம் இறைவன் அருளிச் செய்தவைகள் என்று அவர்கள் கட்டிவிட்டாற் போல, இக்கபிலரகவல் நூலில் உலக வியற்கை மக்களியற்கைக்கு வேறாய் நடுவிகந்து கட்டிச் சொல்லப்பட்டது ஏதேனும் ஒரெட்டுணையாயினும் உண்டா? ஒருசிறிதுமில்லையே. இக்கபிலரகவலிற் சொல்லப்பட்ட அறங்கள் அத்தனையும் எல்லா மதத்தவராலும் எல்லா மக்கட் பிரிவினராலும் உவந்தேற்றுக் கொள்ளப்படும் விழுப்பம் வாய்ந்தனவாயிருத்தல், அதன் மேற்காட்டிய பகுதிகளால் விளங்குவதொடு பிற்காட்டப்படும் பகுதியானும் நன்கு விளங்குதல் காண்க.

"மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ?
காற்றுஞ் சிலரை நீக்கி வீசுமோ?
மாநிலஞ் சுமக்க மாட்டே னென்னுமோ?
கதிரோன் சிலரைக் காயே னென்னுமோ?
வாழ்நான்கு சாதிக் குணவு நாட்டிலுங்
கீழ்நான்கு சாதிக் குணவு காட்டிலுமோ?
திருவும் வறுமையுஞ் செய்தவப் பேறுஞ்
சாவதும் வேறிலை தரணி யோர்க்கே.
குலமும் ஒன்றே, குடியும் ஒன்றே,

இறப்பும் ஒன்றே, பிறப்பும் ஒன்றே,
வழிபடு தெய்வமும் ஒன்றே யாதலால்,
முன்னோர் உரைத்த மொழி தவறாமல்
எந்நா ளாயினும் இரப்பவர்க் கிட்டுப்,
புலையுங் கொலையுங் களவுந் தவிர்ந்து
நிலைபெற அறத்தின் நிற்பதை அறிந்து,
ஆணும் பெண்ணும் அல்லதை உணர்ந்து,
பேணி யுரைப்பது பிழையெனப் படாது."

என்னும் இப்பகுதி எத்துணை மேதக்க அறவுரை பொதிந்த தாய் எந்நாட்டவரானும் எக்கொள்கையினரானும் பொன்னே போற் போற்றற்பாலதா யிருக்கின்றது? கநூஅ அடிகளே யுடைய இக்கபிலரகவலிற் பொதிந்துள்ள அறிவுரைகளத் தனையுந், திருக்குறளிற் போந்த அறவுரைகளோடு ஒத்து, அவற்றினுஞ் சுருக்கமுடையனவாய்ப், பயில்வோருள்ளத்திற் பசுமரத்தாணியெனப் பதியுங் கூர்மை வாய்ந்து திகழ்கின்றன. இத்துணைச் சிறந்த அறவுரை பகரும் ஒரு விழுமிய நூலை ஒருவர் பொய்யாகக் கட்டி, அதனைக் கபிலர் பெயராற் புனைந்து விட்டாரென்னும் பொய்யுரையினும் மிக்கதொரு புளுகுரை யினை யாண்டுங் கண்டிலேம்.

மேலும், ஒருவர் தம்மை யுயர்த்துதற் பொருட்டுப் பொய்யான பல கதைகளைக் கட்டி ஆக்கியதொரு நூலாயின் அதனைக் கட்டுநூலென்றல் வாய்வதேயாம். மற்று, இக்கபிலரகவலின் ஆசிரியராகிய கபிலரோ தம் அன்னை புலைச்சி யென்றும், அவள் ஒரு முனிவரைக் கூடித் தம்மை யுள்ளிட்ட எழுவர் மக்களைப் பயந்தனளென்றும்; அவருள் ஒருவர் வண்ணாரகத்திலும், மற்றொருவர் கள்விற்பார் சேரியிற் சான்றார் வீட்டிலும், மற்றொருவர் பாணரில்லத்திலும், பின்னுமொருவர் குறவர் குடிசையிலும், ஏனையொருவர் துளுவவேளாள ரகத்தினிலும், வேறொருவர் அதியமான் இல்லிலுந், தாம் அந்தணரகத்திலும் வளர்ந்தனரென்றுந் தமது பிறப்பினிழிபையுந், தம்முடன் பிறந்தாரிற் பலர் இழிந்த குலத்தாரிடம் வளர்ந்த இழிபையுந் தினைத்தனையும் ஒளியாமல் நிகழ்ந்தவற்றை நிகழ்ந்த வாறே எடுத்துரைக்கும் பொய்யா நாவிற் சான்றோ ராகிய கபிலர் பெருமான் ஆக்கிய இவ்வுறுதி நூலைக் கட்டு நூலென்றார் உரையே பெரியதொரு பொய்க்கட்டாம். இது கட்டு நூலாயின், எழுவரின் இழிந்த பிறப்பும், அவர் பெயரும், அவர் பிறந்த ஊரும், அவர் வளர்ந்த இடமும், அவரிற் பெரும்பாலார் வளர்ந்த இழிந்த குடியும், எல்லா மக்களுயிர்க்கும் உறுதி பயக்கும் விழுமிய அறவுரைகளும் இதன்கட்

சொல்லப்படுமோ வென்று நடுநின்று ஆராய்ந்து காண வல்லார்க்கு, இதனைக் கட்டு நூலென்று கரைந்தார் பார்ப்பனரும் அவர் வழிப்பட்டார் சிலருமே யல்லால், ஏனைப் பொய்யா நாவினர் அங்ஙனஞ் செய்யா ரென்பது தெற்றென விளங்கா நிற்குமென்க. (தொடரும்)

கானல் வரி

[பண்டிட் அ. நடராச பிள்ளையவர்கள்]

ஐம்பெருங் காப்பியங்களு ளொன்றாகிய சிலப்பதிகாரம் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழினை விளக்கிச் செல்லும் முதன்மைவாய்ந்த நூலென்பது, அறிஞர்கள் பலரு மறிந்த வொன்றாகும். அதன்கண், அக்கால மக்கள் இசைத் தமிழையும், நாடகத் தமிழையும் எங்ஙனம் எழிலுறக் கொண்டு வாழ்ந்தனர் என்பதற்குப் பல சான்றுகள் பல்கி யுள்ளன. அவற்றுள், கானல் வரி, வேட்டுவவரி, ஊர்சூழ் வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை என்றவைந்துஞ் சிறந்து காண்பனவாம். அவை முறையே நெய்தல், பாலை, மருதம், முல்லை, குறிஞ்சி என்ற ஒழுக்கங்கள் நிகழும் நிலத்தில் வாழும் மக்களின் மனப் போக்கினையும், இசையமைப் பினையும், நாடக வெழிலையும் எடுத்தியம்புவனவாம். குரவை யாவது அவ்வந் நிலமக்களாகிய உயர்ந்தோர்மாட்டு நிகழ்ந்த அகப்பொருட் போக்காகிய அன்பினையோ, அன்றிப் புறப் பொருட்போக்காகிய வெற்றியினையோ பொது மக்கட்குப் புலனுமாறு பாடியாடிக் காட்டும் பண்புடைக் கூத்தாம். இஃது எழுவரேனும், எண்மரேனும், ஒன்பதின்மரேனும் கைகோத்து ஆடுவதாகும். வரியாவது அவ்வந்நிலத்து நிகழ்ந்த உயர்ந்தோர் செய்தியை அவர் பிறந்த நிலத்தியல்பு கொண்டும், அவர்தம் தொழில் கொண்டும் விளக்கி, ஆடிப் பாடும் இசைப் பாக்களாலாகிய நாடகவமைப்பாம். இது நடர்கள் சிலர் சேர்ந்து நின்று மொழியாடலை மேற்கொண்ட இசைப் பாக்களாற் பாடி நடிப்பதாகும். இதனைக் கண்கூடுவரி முதலாகப் பலதிறப் படுப்பர். அவற்றைக் கட்டுரையிறுதியிற் காண்பாம்.

இனி, யாம் எடுத்துக்கொண்ட கானல் வரியினை ஆராய் வாம். இது சிலப்பதிகாரத்திற் புகார் காண்டத்தின் உட்

பகுதிகள் பலவற்றில் ஏழாவதாகக் காணப்படுகின்றது. இப்பகுதி கடல் விளையாட்டினைக் காணச்சென்ற மாதவியும், கோவலனும் பாடிய அகப்பொருட் டுறைகளைக்கொண்டு, அக்கால நெய்தனில மக்கள் பாடிவந்த இசைப்பாட்டுக்களின் போக்கையும், நாடகவமைப்பினையும் இயம்பவல்லதாக விருக்கின்றது. 'கானல் வரி,' என்பது கடற்கரைச் சோலையின்கண் நிகழ்ந்த அகப்பொருட் செய்திகளை நாடகமாக அமைத்துப் பாடிவரும் ஒருவகை இசைப் பாட்டு எனப் பொருள்படும். இது பெரும்பாலும் கலிப்பாவாலும், அதன் இனப்பாவாலும் பாடப்பெறும்.

கானல் வரியாகிய இந்நாடகத்தினில் அகப்பொருட்குரிய தலைவன், தலைவி, பாங்கன், தோழி முதலோர் நடர்களாகத் தோன்றுவர். நிகழ்விடம் கடற்கரைச் சோலையும் அதன் பக்கங்களுமாம். அகப்பொருட் டுறைகட்கு இன்றியமையாப் பாட்டுடைத்தலைவன் நாடகத்தின் முதற்கட் புகழ்ந்து கூறப்படுவன். அக்கூற்றே, முகமுடைவரி எனவுரைக்கப்படும். இதன்கண், பாட்டுடைத் தலைவன் புகழினை அவன் நாட்டு யாற்றினோடு சேர்த்துக் கூறுதலின், முகமுடைவரி எனற்பாலது ஆற்று வரி எனப்பெயர் பெறலாயினது. பின்னர், நாடகம் நிகழும் நிலத்தையும், அதனைச்சார்ந்த ஊரினையும் சிறப்பித்துக்கூறும் சார்த்துவரி கூறப்படும். அதனை முகச் சார்த்துவரி எனவுங்கூறுவர். பின்பு கானல் வரி கைக்கொள்ளப்பெறும். அக்கானல் வரியினை நிலைவரி, திணைநிலைவரி, துள்ளல்வரி, முரிவரி, கானல்வரி என ஐவகையாகப் பிரித்தல் மரபு. இவை ஆண்பாலராகிய தலைவன், பாங்கன் முதலோர் கூற்றுக்களாகிய ஆண்பாற் கானல் வரியாம். கோவலன் பாடிய கானல்வரிப் பாக்கள் இம்முறையினையே பின்பற்றி யுள்ளன.

இனி, தலைவி, பாங்கி முதலோர் கூற்றுக்களாகிய பெண்பாற் கானல் வரியானது ஆற்று வரி, சார்த்து வரி, திணைநிலை வரி, மயங்குதிணை நிலைவரி, சாயல் வரி, முகமில் வரி என அறுவகையாகப் பகுத்துக் கூறப்பெறும். மாதவி பாடிய கானல் வரிப்பாக்கள் இம்முறையினையே பின்பற்றி யுள்ளன. ஆற்று வரியினையும், சார்த்து வரியினையு மொன்றாக்கி இணை நிலைவரி எனக் கூறுவாருமுளர். அகப்பொருட்டுறைகளின் அமைப்பினைத் திருக்கோவையார் முதலிய நூல்களிற் கூர்ந்து நோக்குவார்க்கு அஃதொரு நாடகவமைப்பே என்பது நன்கு புலனாம். ஆதலின், இக்கானல் வரியிற் காணப்பெறும் பாக்களும் அம்முறையாகவே கடற்கரைச்

சோலையிலும், அதனை யடுத்த விடங்களிலும் நிகழ்ந்த காதற் கதையினை நாடகமாக வமைத்து, அக்கால மக்கள் பாடி வந்தனரென்பதும், அதில் வரும் ஆண்பாற் கூற்றுக்களைக் கோவலன் தனியாக எடுத்து முதற்கட் பாடினுன் என்பதும், அவனைப் பின்தொடர்ந்த மாதவி பெண்பாற் கூற்றுக்களைத் தனியே பிரித்தெடுத்துப் பாடலாயினு ளென்பதும் ஈண்டுக் கருத வேண்டுவனவாம்.

கடல் விளையாட்டினைக் காணப்புறப்பட்ட கோவலன் அரச வாகனமாகிய அத்திரி (கோவேறு கழுதை)யிலும், மாதவி கோவால வண்டியிலுமாக அமர்ந்து திருமகளின் இருப்பிடமாகிய பீடிகைத்தெருவைப் பின்னிட்டுக் கடந்தனர். கடல்வளமாகிய முத்து, சிப்பி, பவளம், சங்கு முதலிய வற்ருற் கவினுற்ற நகர வீதிகள் பல அவர்களால் கடக்கப் பட்டன. மரக்கல வழியே வந்து வாலிவிய மணற்றிடரிற் றங்கிய பிறநாட்டார் சேரிகள் பலவற்றை அவர்கள் பார்த்துச் சென்றனர். இவ்விதமாக அவ்விருவரும் நெய்தலங்கானலை நெருங்கினர். அங்குக் காவிரிப்பூமாநகர மக்கள் பலர் கண் கொள்ளாக் காட்சியாய்ச் சூழ்ந்து, எங்கும் நிறைந்திருந்தனர். மாதவியும், கோவலனும் காவிரிப் பேரியாற்றின் கரையினை யடுத்ததும், கடலினது புலால் நாற்றத்தைப் போக்கவல்ல மடலவிழும் மலரையுடைய தாழை மரங்கள் வேலிபோற் சூழப் பெற்றதும், புன்னைமரநிழல் பொருந்தியதுமான வோரிடத்தை யணுகினர். ஏவலர் அங்குள்ள புதுமணற் பரப்பினிடத்தே ஓவியக் கூடாரமொன்றிட்டு, அதன்கண் வெண்கால் அமளி மேற்கட்டுடன் அமைத்து அழகு செய்தனர்.

கோவலனும், மாதவியும் அதன்கட் புகுந்து அமர்ந்திருந் தனர். மாதவியின் தோழியாகிய வயந்தமாலை தன் கையோடு கொணர்ந்திருந்த யாழினேடு, மாதவி பக்கலில் வந்து நின் ருள். அவ்யாழ் அழகிய உறையிலிடப் பெற்றும், மலரால் அழகு செய்யப்பட்டும், மணமகளிரினைப் போன்றும் காணப் பட்டது. அதனை மாதவி வணக்கத்துடன் வாங்கி, பண்ணல் முதலிய எண்வகைக் கலைத்தொழில்களாற் சுரங்களை எழுப்பி, மரகதமணிக் கணையாழிகளணிந்த மெல்லிய விரல்களால் யாழ் நரம்புகளை வார்தல், வடித்தல் முதலிய எண்வகை இசைக் கரணங்களா லொலித்து இசையினை ஒழுங்கு படுத்தினுள். பின்பு, அவள் அவ்யாழைக் கோவலன் கையிற் கொடுத்து, "காதல! யான் நின்பணிப்பின்றி யாழ் வாசித்தல் தக்க தொன்றன்று; நின்னை வாசிக்கும்படி ஏவுதற்கும் தகுதியுடை யேனல்லேன். ஆகலின், நின்பணி யாதென எதிர்பார்க்கின்

றேன்,'' என இயம்பினாள். யாழினைப் பெற்றுக் கொண்ட கோவலன் மகிழ்வுடன் கானல் வரிப்பாக்கள் பாடத்தொடங்கினான். முதற்கண், அவனால், பின்வரும் ஆற்று வரிப்பாக்கள் பாடப்பெற்றன:—

திங்கண்மாலை வெண்குடையான் சென்னிசெங்கோ லதுவோச்சி,
கங்கை தன்னைப் புணர்ந்தாலும், புலவாய் வாழி! காவேரி;
கங்கைதன்னைப் புணர்ந்தாலும், புலவாதொழிதல் கயற்கண்ணாய்!
மங்கைமாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி, காவேரி. (க)

மன்னுமாலை வெண்குடையான் வளையாச்செங்கோ லதுவோச்சி,
கன்னி தன்னைப் புணர்ந்தாலும், புலவாய்வாழி! காவேரி;
கன்னி தன்னைப் புணர்ந்தாலும், புலவாதொழிதல் கயற்கண்ணாய்!
மன்னுமாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி. (உ)

உழவரோதை, மதகோதை, யுடைநீரோதை தண்பதங்கொள்
விழவரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி! காவேரி;
விழவரோதை சிறந்தார்ப்ப நடந்ததெல்லாம் வாய்காவா
மழவரோதை வளவன்றன் வளனேவாழி காவேரி. (ங)

(க). கயல் மீன்களைக் கண்களாகக் கொண்டிருக்கும் காவிரி யென்னுங் காரிகையே! மதியினைப்போன்று, மாலைகள் தாழப்பெற்ற வெண்கொற்றக்குடையினையுடைய சோழ மன்னன் தனது செவ்விய அரசாட்சியை வடநாடுகளிற் செலுத்தி, கங்கையென்னுங் கட்டழகியை மணம்புரிந்து கொண்டாலும், காவேரியாகிய நீ சோழன்பால் ஊடல் கொண்டு உலராது வாழ்வாய்; நீ அங்ஙனம் வாழ்க்கையை மேற்கொள்ளுதற்குக் காரணம் நின்போன்ற மண்ணுலக மங்கையர்களின் மாபெருங்கற்பேயாம் என்று தெரியலானேன், ஆகலின், காவேரியே: நீ நீடூழி வாழ்வாயாக.

(உ). கயலாகிய கண்களைக்கொண்ட காவிரிப்பாவையே! நிலைபெற்ற மாலைகள் நீண்டு நாலப்பெற்ற நிகரிலாவெண் கொற்றக் குடையினைக்கொண்ட சோழன் திறம்பெறத் தனதாட்சியைத் தென்னாடுகளிற் செலுத்திக் குமரியென்னும் கன்னியினைக் கூடிப்புணர்ந்தாலும், அவன்பால் வெறுப்புக் கொள்ளாது வாழ்கின்றாய்; அதற்குக் காரணம் நிலைபேறுற்ற நெஞ்சினைக்கொண்ட நேரிழைமார்களின் நிகரிலாக்கற்பேயாம் எனத்தெரியலானேன்: ஆகலின், காவேரியே, நீ நீடுழிவாழ்வாயாக. (கன்னி—குமரியாறு)

(ங). காவிரிச் செல்வீ! கிலங்களை யுழுகின்ற மள்ள ரோசையும், நீர்பாய்கின்ற மதகிஞெலியும், புதுப்புனலாடு வார் புரியுங்கலியும் பொங்கி ஆரவாரிக்கும்படி நீ சோணாட்டூடே தொடர்ந்து சென்று வாழ்கின்றாய்; நீ அங்ஙனம் வாழும் அவ்வாழ்க்கைகட்கெல்லாம் பின்வாங்கலில்லாப் பெருவீரர்களின் பெருமுழக்க மிக்க செம்பியனது ஆட்சிச் சிறப்பே முதலாம்: ஆகலின், காவேரியே, நீ அவன் சிறப்பை எண்ணி வாழ்வாயாக.

இம்மூன்று பாக்களும் அகப்பொருட்டுறை நாடகமாகிய கானல்வரிக்குரிய பாட்டுடைத்தலைவனாய வளவனது சிறப்பினைக் கூறுமுகத்தான் முகம்போன்று முன்னிருத்தலின், 'முகமுடைவரி,' எனப்பட்டன. இவற்றின்கண் சோணாட்டுக் காவிரியாற்றினை வளவன் புகழோடு மாட்டிக் கூறுதலின், இவை, 'ஆற்றுவரி,' எனவும் பெயர் பெற்றன. இவற்றில், காவிரியின் இயல்பு கூறுமுறையான் கண்ணகியின் கற்பு மேம்பட்டுக்காணுமாறும், அது, பின்னர், கோவலன் மாதவியினை மறந்து போதற்கு கொளு கொம்பாமாறும் கூர்ந்து காண்க. வளவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது அக்கால மக்கள் அரசனைக் கொண்டாடும் அன்பின் தூய்மையை அறிவுறுத்தற்கென்க. வளவன் வடபுலத்தினையும், தென்புலத்தினையும் தன்னாட்டோடு சேர்த்து ஆட்சி செய்யினும் அரசியல் விரிந்தகாரணமாக வேற்படும் பாதுகாப்புக் குறைவினை அணுகவிடா ஆண்மையுள்ளான் என்பார், "கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய்," என்றும், "கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவாய்," என்றும் நயம்படக் கூறினார். வளவர்களின் அரசியற் சிறப்பாலேயே காவிரி, சோணாடு முழுவதிலும் பல கால் கொண்டு சென்று பண்படுத்திய தென்பார், "நடந்ததெல்லாம் வாய்காவா மழவரோதை வளவன்றன் வளனே," என வலியுறுத்தலாயினர். (காவேரி—கவேரன் புதல்வி.)

(தொடரும்)

வடமொழி சென்ற தென்சொற்கள்

[பண்டித திரு. ஞா. தேவநேயப் பாவாணர்]

(சிலம்பு கச பரல் க0-சஉக-ம் பக்கத் தொடர்ச்சி)

இராக்கன், இராக்கி என்னும் பெயர்கள் முறையே ஆண்பாற்கும் பெண்பாற்கும், இன்னும் தென்னாட்டில் சில வகுப்பார்க்குள் இடப்படுகின்றன.

இராக்கதர் பண்டைக்காலத்திலேயே தமிழ் நாட்டிலிருந்ததால், அவரைக் குறிக்கும் பெயரும் தமிழி லிருத்தல் வேண்டும்.

இராசன் அரசு—அரசன்—ராஜன்.

அரம்=அழித்தல். See அரன். அரம்—அரசு.

அரன்=தெய்வம், சிவன்,

அரசு+அன்=அரசன்=தேவன் போன்றவன்.

அரசு=தலைமை. மரங்கட்குள் தலைமையானது அரசமரம்.

தேக்கு, கருங்காலி முதலியவை உறுதியாயிருப்பினும் அரசுபோல் ஓங்கி வளர்வதில்லை.

'ஆல் போற்படர்ந்து அரசுபோ லோங்கி' என்னும் உலகியல் திருமணவாழ்த்தை நோக்குக.

ஆலமரம் அதிகமாய்ப் படரினும், விழுதூன்றியபின் அடி தளர்ந்துபோம். அரசு ஓங்கிவளர்ந்து நெடுநாளிருக்கும். அதனால் பிள்ளையார் கோயில், மணவறை, பட்டஞ்சூட்டு' விழாவகம் முதலியவற்றில் அரசங்கன்றையே நடுவர்.

அரசு, பூவரசு என்பன ஓரின மரங்கள். மேனாட்டார் இலை வடிவொப்புமை பற்றிச் சில மரங்களை ஓரினமாக்கினாற் போலப் பண்டைத்தமிழரும் இலைவடி வொப்புமைபற்றி அரசையும் பூவரசையும் ஓரினமாக்கினர். பூவையுடைய அரசு பூவரசு. அரசமரத்திற்குப் பூவின்மை யறிக.

அரசன் என்னும் தென் சொல்லே ராஜன் என்று வடமொழியில் திரியும். அரசன் என்பதை ராஜன் என்னும் வடசொற்றிரிபாகத் தடுமாறக் கூறுவர் மொழி நூல் அறியாதார் சிலர். அரசு, பூவரசு என்னும் மரப்பெயர்கள் ஆரிய வருகைக்கு முன்பே தமிழ்நாட்டில் வழங்கிய பழந் தமிழ்ப்பெயர்கள் என்பதையேனும் அவர் அறிவாராக.

அரசன்—ராஜன், Sans, ராஜ் (இந்துஸ்தானி)

ராஜன்—இராஜன்—இராசன் (தற்பவம்)

ராஜ்யம்—ராச்சியம்—இராச்சியம்.

ராஜன் என்னும் சொல்லினின்று Rego, regent, region, regicide, regular முதலிய ஆங்கிலச் சொற்கள் பிறக்கும்.

அரசன்—அரைசன், அ—ஐ போலி.

அரைசன்—அரையன், ச—ய போலி.

அரையன்—ராயன் Sans. Roy; Eng. Vice-Roy.

ராயர் என்பது அரசரையும் ஒரு பார்ப்பனக் குடியை யும் உணர்த்தும்.

இராசகாரியம், இராச சின்னம், இராஜஸ்ரீ, இராசநீதி, இராசராசன், இராசவசீகரம், இராசவீதி, இராசாக்கினை, இராசாதிகாரம், இராசாதிபதி, இராசாத்தி, இராசாளி முதலிய தொடர்மொழிகளெல்லாம் அரசகாரியம், அரச சின்னம் முதலிய செந்தமிழ்த் தொடர்களின் திரிபுகளே யென்றறிந்து கொள்க.

இராத்திரி, இராத்திரம்.

இரா + திரி = இராத்திரி. இரா + திரம் = இராத்திரம். திரம் என்பது ஒரு விகுதிச் (Suffix) சொல்.

C. F. சாயுந்திரம்—சாய்ந்திரம்.

திரம்—திரி

இரா—இருண்டிருப்பது. இருமை = கருமை, இரண்டு, இரவு என்னும் பெயர்கள் ரண்டு, ராவு என்று திரிந்தாற் போல, இராத்திரி, இராத்திரம் என்னும் பெயர்களும் ராத்ரி, ராத்ரம் என்று திரியும்.

உசிதம். உசிதம் = உயர்வு, உகரச்சுட்டடியாய்ப் பிறந்தது.

லட்சணம். லக்ஷணம், லக்ஷ்யம் என்னும் வடசொற்கள் இலக்கணம், இலக்கியம் என்னும் தென்சொற்களின் திரி பென்பதைத் 'தமிழ்ப்பொழி'லில் விரிவாகக் கூறியுள் ளேன். ஆண்டுக் காண்க.

லட்சம். இலக்கம்—லக்ஷம்.

தமிழிலுள்ள எண்ணுப்பெயர்களெல்லாம் உகரவீற்றன என்று கொண்டு, தமிழர்க்கு ஆதியில் 100 வரையில்தான் எண்ணத்தெரிந்ததென்றும், 999 வரையில்தான் தமிழிலக்க

மென்றும், ஆயிரம், இலக்கம், கோடி என்னும் பெயர்கள் வடசொற்களென்றும் சிலர் கூறுகின்றனர். வானநூல் கணிதநூல் முதலிய கலைகளில் எத்துணையோ வல்லுநரும் சிற்றிலக்கம், பொன்னிலக்கம் முதலிய அளவைகளையும் ஆய்தக்குறுக்கம் மகரக்குறுக்கம் முதலிய மாத்திரை நுணுக்கங்களையும் அறிவதில் நுண்மாண் நுழை புலத்தினரும், வெள்ளம், ஆம்பல் முதலிய பேரெண்களைக் குறிப்பிட்டாண்டு வருமான முன்னைத் தமிழர்க்கு மூன்று தானங்கட்குமேல் எண்ணத்தெரியாது என்பது எங்ஙன் பொருந்தும்?

'ஆயிரக்கிளவி வரூஉங்காலை' எனத் தொல்காப்பியத்துட் கூறியிருப்பதால், தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே ஆயிரம் என்னும் எண்ணும் அதன்பெயரும் தமிழ்நாட்டில் வழங்கியிருந்தமை அறியப்படும்.

இலக்கமென்பது ஒரு பெரிய இலக்கம் (எண்).

கோடி என்பது கோடி (கடைசி) யெண்.

இலக்கம் தமிழ். lakh Eng. லக்ஷம் Sans.

கோடி தமிழ். கோட்டி, Sans. குடோடு Arabic, crore, Eng.

லௌகீகம். உலகம்—லோகம்—லௌகிகம்.

உலகு + அம் = உலகம்.

உலகு = உலப்பது: உலத்தல் = அழிதல்.

'காலமுலகம்' என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தால், உலகம் என்னும் சொல் தொல்காப்பியருக்கு முன்பே தமிழ் நாட்டில் வழங்கியதென்றும், செந்தமிழ்ச்சொல் என்றும் அறியப்படும்.

உலகம் என்பதன் திரிபாகிய லோகம் என்னும் சொல் வடமொழியில் லௌகிககம் எனத் தத்திதாந்தமாகும்.

சாமம். சமம்—சாமம்.

இரவு மூன்று சமபாகமாகப் பகுக்கப்பட்டதினால், ஒவ்வொரு பாகமும் சாமமெனப்பட்டது.

ஒரு சாமம் பத்து நாழிகை.

சாமம்—யாமம், ச—ய போலி.

மூன்று சாமங்களும் முதற்சாமம், நடுச்சாமம், கடைச் சாமம் என உலகவழக்கிலும், மாலையாமம், நள்ளியாமம், வைகறையாமம் எனச்செய்யுள் வழக்கிலும் கூறப்படும்.

யாமம் என்பது சிறப்பாக நடுச்சாமத்தைக் குறிக்கும்.

சின்னம். சின்னம்=அடையாளம்.

'சின்னம் அல்லாக் காலையான'

'எண்ணிடையிட்டுச் சின்னங் குன்றியும்'

எனச் சின்னம் என்பது கலிப்பாவின் ஒருறுப்புப் பெயராகத் தொல்காப்பியத்துட் கூறப்பட்டிருப்பதால் தமிழ்ச் சொல்லாத லறியப்படும்.

குடை, கொடி முதலியவை அரச அடையாளங்களாதலின் சின்ன மெனப்படும்.

அரச சின்னங்களைப்பற்றிக் கூறும் செய்யுள் சின்னப்பூ.

சின்னம்—Sign (Eng.) ஒருவரின் அடையாளமாகிய கையெழுத்து. Sign—signal.

தானம். தா+அநம்=தாநம்—தானம்.

தா பகுதி, அனம் விகுதி.

தா என்னும் தமிழ்ப்பகுதியே லத்தீனில் do என்றும். இந்துஸ்தானியில் தேவ்என்றும் திரியும். தானம்-donum, Lat, donation, Eng.

தேவதை. தேய்—(தேய்வு)—தேவன்.

தேய்வு—(தேய்வம்)—தெய்வம். தேவு—தே.

தேய்த்தல்=உரசுதல், கடைதல்.

மூங்கில்கள் ஒன்றோடொன்று உரசுவதாலும், மக்கள் தீக்கடை கோலாற் கடைவதாலும் நெருப்புண்டாகும்.

பொருள்கள் தேய்வதால் உண்டாவது தேயு.

தேய்+உ=தேயு; தேயு—தே—தீ.

தேய்—தே. தே+உ=தேவு தேவு+அன்=தேவன். தீப்போல்வது தெய்வம்.

தேவு—Theos. Gr.; Deus. Lat.; Deity; Eng.

தேவு—தேவம்—தேவதம்—தேவதை. தெய்வம்—தெய்வதம்.

பரிபாகம். பரு—பரி, மிகுதிப்பொருளுணர்த்தும் உபசர்க்கம்.

பகு+அம்=பாகம், முதனிலை திரிந்து விகுதி பெற்ற தொழிற்பெயர்.

பகு+தி=பகுதி—பாதி.

பகு+அல்=பகல்—பால்.

பகு+ஐ=பகை.

பகு+அம்=பக்கம் } பகுதியிரட்டித்து விகுதி பெற்ற
பகு+அல்=பக்கல் } தொழிற் பெயர்.

பகு+பு=பகுப்பு.

பகு—வகு. வகு×ஐ=வகை—அகை.

பகு—பகிர். வகு—வகிர். வகு×பு=வகுப்பு.

பகு—பா. பா+தி=பாத்தி.

பாத்து+இடு=பாத்திடு, இடு துணைவினை.

பாத்திடு—பாத்தீடு—பாதீடு, முதனிலைதிரிந்த தொழிற் பெயர்.

பாதம். பதி+அம்=பாதம், முதனிலை திரிந்து விகுதி பெற்ற தொழிற் பெயர்.

நிலத்திற் பதிவது பாதம்.

முகம். மூசு மூசு என்பது மூச்சுப்பற்றிய ஒலிக்குறிப்பு.

மூசு மூசு என்று உயிர்ப்பது மூச்சு.

மூச்சுவிடும் உறுப்பு (மூச்சி)—மூஞ்சி.

மூச்சு—மூக்கு=1. மூச்சுவிடும் உறுப்பு 2. மூக்கிலுள்ள மலம்.

தமிழிற் பிறமொழிக் கலப்பு

தன் இயற்கைச் சொற்களால் அமைந்ததாகிய தமிழிற் பிற மொழிச் சொற்களைப் புகுத்துதல் எது போலிருக்கின்றதென்றால், எல்லா வுறுப்புகளும் அமைந்த அழகியதோர் உடம்பில் உள்ள உறுப்புகளை வெட்டி எறிந்துவிட்டு, வேறு மண்ணாலும் மரத்தாலுஞ் செயற்கையாக அவ்வுறுப்புகள்போற் செய்து அவற்றை அதன் கண் ஒட்ட வைத்துப் பார்த்தலுக்கே ஒப்பாயிருக்கின்றது. மயிர், குஞ்சி, கூந்தல் முதலிய தமிழ்ச் சொற்களை விடுத்து 'ரோமம்', 'சிகை' என்னும் வடசொற்களையும் உடம்பு, தலை, சென்னி, முகம் முதலியவற்றை நீக்கிச் 'சரீரம்', 'சிரசு', 'வதனம்' என்பவற்றையுங், கண், காது, செவி, மூக்கு என்பவற்றுக்கு 'நயனம்', 'கர்ணம்', 'நாசி' என்பவற்றையும், மிடறு, கழுத்து என்பவற்றுக்குமாறாகக் 'கண்டம்' என்னுஞ் சொல்லையுந், தோள், கை முதலியன இருக்கப் 'புஜம்', 'கரம்' என்பவற்றையும் கொண்டுவந்து நுழைத்தல், அவ்வத் தமிழ்ச் சொற்களாகிய உறுப்புகளை வெட்டி எறிந்துவிட்டு, அவைபோன்ற ஏனை மொழிச் சொற்களைக் கொணர்ந்து அத்தமிழ் உடம்பின்கண் ஒட்ட விடுதலையே போல்கின்றதன்றோ?

—மறைமலையடிகள்.

அறிவியற் பகுதி - Science

ஞாலநூல் (Geology)

[திரு. S. நடராஜன் அவர்கள் B. A.]

(சிலம்பு-௧௨ : ௩௮௪-ம் பக்கத் தொடர்ச்சி)

2. இரண்டாம் அதிகாரம்

மலைமாட்சி!

நிலப்பரப்பு, கெடுதல், திரிதல், தோன்றல், இயற்கை காற்று, நீர், நெருப்பு வகையாய் ஆற்றும் பணி.

1. கண்ணகல் ஞாலத்தின் நிலப்பகுதியின் எழில் நலங்களை எடுத்துக் காட்டுவது மாண்புறு மலையேயாம். மலைமாட்சியில் இன்புறாத கற்றோரும், மற்றோரும், இளையோரும், முதியோரும் உளரோ! இத்தகைய மலை நிலையாயுள்ளது என நாம் தவறாக எண்ணுகின்றோம். மேகங்கள் எவ்வாறு நிலையற்ற வடிவந்தாங்கி ஆகாயத்தில் சஞ்சரிக்கின்றனவோ, அவ்வாறே இம்மாண்புறு மலைகளும் ஞாலத்தின் மேற்பரப்பில் ஓரோர் காலத்தே ஓரோர் உருத் தாங்கித் திகழ்ந்து பின்னர் மறைந்து ஒழிகின்றன. நம் பண்டைத் தமிழகத்தை அழகுபடுத்திய குமரிக்கோடும், குமரியாறும், ஏழ்தெங்க, ஏழ்பனை நாட்டுச் சமவெளிகளும் பயிர் நிலங்களும் இற்றைநாட் கடல் வாய்ப்பட்டவன்றோ? உண்மையை ஆராயுமிடத்துப் பெருமிதத்துடன் மேகத்தைத் தாங்கி நிற்கும் மலைகளும் பள்ளத் தாக்குகளும், நிலப்பரப்பும், நதி யோரச் சமவெளிகளும் நிலையாய் இருப்பனவல்ல. இவைகள் இயற்கை யென்னும் காலனின் ஏவலாளர்களால் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும் தேய்க்கப்பட்டு நாளாவட்டத்தில் குறைந்து இறுதியில் அழிவுறுகின்றன. உலகிற் பெரிய மலையாகிய இமயமலையும் இவ்வாறு தேய்வுற்றுக் குறைந்து ஒரு காலத்து இல்லாது போகலாம்.

2. ஞாலம் தனி உருவெய்தி ஞாயிற்றைச் சுற்றத் தொடங்கிய காலந்தொட்டு இற்றைவரை, கடல்களும் நிலப்பரப்புகளும் பல மாறுதல்களைக் கண்டுள்ளன. அக்காலத்தே தோன்றி வளர்ந்து வாழ்ந்துவந்த மரஞ்செடி கொடி இனங்கள் பலவும், பறவை இனங்கள் பலவும், விலங்கினங்கள் பல

வும் பிற்காலத்தே வாழக்கூடாது இறந்தொழிந்தன. மாறி மாறி நிகழும் தட்பவெப்ப நிலையும்; காற்று, பனி, மழையும்; ஊற்று, சிற்றாறு, ஆறும்; கடலில் நிகழும் நீர் ஏற்றம், வற்றம், அலை, நீரோட்டமும்; மண்கம்ப கடற்கம்ப அதிர்ச்சியும் எரிமலைத் தோற்றமும்; மரஞ்செடி கொடிகளும் பிற உயிர் இனங்களும் தோன்றிவாழ்ந்து மடிவதும், மின்சாரத்தாதுப் பொருள்கள் மாறுவதும், ஞாலத்தின் மேற்பரப்பில் மாறுதல்களை உண்டாக்கிவருகின்றன. இம்மாறுதல்கள் ஓய்வின்றிஇடைவிடாது நிகழ்கின்றன. இயற்கை இத்தொழிலை எவ்வாறு நடத்துகின்றது எனக் கூறுவாம்.

3. ஞாலத்தின் அமைப்பிலேயே இம்மாறுதல்கள் ஏற்படும் தன்மை இருக்கின்றது. ஓரிடத்தில் நம் கண்ணிற்குப் புலப்படாமலும்,பிறிதோரிடத்தில் நம் கண்ணிற்குப்புலப்படும்படி தெளிவாயும் மாறுதல்கள் நிகழ்கின்றன. இம்மாறுதல்களுக்குக் காரணம் (1) காற்று (2) நீர் (3) ஞாலத்தில் வாழும் உயிர்கள் (4) தாதுப்பொருள்கள் (5) ஞாலத்தின் வயிற்றில் இருக்கும் நெருப்பு முதலியனவாம்.

4. (அ) ஞாலத்தைச் சூழ்ந்து கொண்டிருப்பது காற்று. காற்றால் ஞாலத்தின் மேற்பரப்பில் ஏற்படும் மாறுதல்களைப் பரக்கக் காணலாம். ஞாலத்தின் பல பகுதிகள் காற்றால் சின்னபின்னமாக்கப் படுகின்றன. கடற்கரை ஓரங்களில் ஆடித் திங்களில் உலவச்செல்லும் மக்கள் காற்று மணலைப் பெரிதும் வாரி இறைப்பதைக் கண்ணுற்றிருக்கலாம். பெருங்காற்று வீசும்போது மணல் போன்ற கெட்டியாகத் தரையுடன்பிணைக்கப்படாத பல பொருள்களைத் தூக்கிச்சென்று அருகிலுள்ள மலை குன்று முதலியவைகளின்மேல்மோதி அவைகளை உடைத்துப் பொடிப் பொடியாக்குகின்றது. மணல் மேடுகளின் தோற்றம் மாற்றத்திற்குக் காரணம் காற்றேயன்றோ? ஆசியா ஆஃப்ரிக்கா முதலிய கண்டங்களில் காணப்படும் பெரிய பாலைவனங்களில் இருந்து கிளம்பும் மணற்காற்று (Sand drift) மிக வேகமுள்ளது. பக்கத்துள்ள பாறைகளைத் துகளாக்குகின்றது. மணற்காற்றால் ஏற்படும் மணல்மேடுகளை நம் நாட்டுக் கடற்கரைகளில் (இராமேச்சுரத்தில்) காணலாம். ஆனால் ஆஃப்ரிக்காவிலுள்ள மணற்குன்றுகளுடன் (Sand dunes) இவற்றை ஒப்பிட்டு நோக்கலாகாது. திண்டுக்கல்லுக்குச் சுமார் 30 கல் தூரத்திலுள்ள கொன்றங்கி என்னும் மலை காற்றால் தினந்தோறும் குறைக்கப்பட்டு வருகிறது. அம் மலை ஒரு கோபுரம்போல் காணப்படும். அதன் அருகில் செல்பவர்களுக்குக் காற்றின்வேகமும் கற்கள் காற்றில் பறப்பதும்

தெரியவரும். காற்றால் பாறைகள் துளைக்கப்பட்டுச் சின்னா பின்னமாக்கப்படுகிறது.

(ஆ) ஞாலத்தின் குளிர்ச்சியான மண்டலங்களில் அடிக்கும் பனிக்காற்றும் பாறைகளை உடைத்துத் தள்ளுகின்றது. பாறைகளில் உள்ள வெடிப்புகளிலும், துளைகளிலும் மழை ஈரம் உட்சென்று, பின்னர் காற்றால் குளிரும்போது பாறைகளை உடைத்துத் தள்ளுகின்றது. தண்ணீர் பனிக்கட்டியாக உறையக் கூடிய மண்டலங்களில் பொதுவாக இக்காட்சி நிகழக்கூடியது. இப் பனிக்காற்றாலும், மலை, குன்று, பறம்பு, இறுகிய நிலங்கள் நிலை தடுமாறுகின்றன. இமயமலை போன்ற உயர்ந்த மலைச் சிகரங்களில் உறைந்து கிடக்கும் பனியானது வெப்ப காலங்களில் பனியாறாக மாறிக் கீழிறங்கும்போது மலைகளை உடைத்துச் சின்னா பின்னப்படுத்துகின்றது. இப் பனியாறுகளில் பனிக்கட்டிகள் கற்பாறையென மிதந்து வருவதையும், வரும் வழியிலுள்ள பெரும் பாறைகளை உடைத்து இழுத்துக் கொண்டு வருவதையும் காணலாம்.

(இ) காற்று, பிராணவாயு, உப்புவாயு, கரியமிலவாயு என முப்பெரும் பூதங்களால் ஆய ஒரு கலவையாம். இப் பூதங்களின் இயற்கைக் குணமே பாறைகளின்மீது வீசும்போது அவைகளைத் தேய்க்கும் எல்லா விதப் பாறைகளையும் காற்றினுள்ள இப்பூதங்கள் சிதைவுறுத்தும். சிறப்பாக கரியமில வாயு சுண்ணாம்பு சம்பந்தமான பாறைகளையும், பிராணவாயு இரும்பு சம்பந்தமான பாறைகளையும், உப்பு வாயு பிற பாறைகளையும் பாதிக்கின்றன. உறுதியான கற்பாறைகளும் காலப் போக்கில் இம் முப்பெரும் பூதங்களால் குறைபடுகின்றன.

(ஈ) மரஞ் செடி கொடிகளும் பிற உயிரினங்களும் தோன்றி வாழ்வதற்குக் காற்று இன்றியமையாதது. புல் பூண்டுகளும் உயிர் இனங்களும் நிலப்பரப்பைப் பெரிதும் மாற்றுகின்றன. காற்றுச் சிறப்பாக மழை பெய்வதற்கு ஏதுவாகிறது. இம் மழையால் சிற்றாறு, ஊற்று, ஆறு முதலியன ஏற்பட்டு நிலப் பரப்பை அழிக்கின்றன.

5. (1) காற்றைப்போல் நீரும் நிலப்பரப்பைக் கெடுக்கின்றது. அழித்தல் வேலையை நீர் நிலப் பகுதிகளின் எல்லாப் பக்கங்களிலும் ஒய்வின்றிச் செய்துவருகின்றது. நீர், மழை, ஊற்று, ஆறு, கடல், நீர் ஏற்றம், வற்றம், அலை ஆய உருத்தாங்கி நிலப் பரப்பைச் சிதைத்த வண்ணமாயிருக்கின்றது. இறுகாத கடற்கரை ஒரங்களிலும், மண்போட்டு உயர்த்திய மண் மேட்டு

களிலும் மழைநீர் தரையை ஆழமாக அறுத்துச் செல்வது கண்கூடு. சிற்றாறுகளும், ஆறுகளும் மலைகளினின்றும் இறங்கி வரும்போது மலைகளைக் குடைந்து கற்களை உருட்டி மணலாக்கிக் கடல் கொண்டு சேர்க்கின்றன. இமயமலையானது சிந்து, கங்கை பிரமபுத்திர நதிகளால் அறுக்கப்பட்டு அதன் பாறைகள் மணலாக மாறி அராபிக் கடலிலும், வங்காளக் குடாக் கடலிலும் தூவப்படுகின்றன. காவேரி, கோதாவரி ஆய தென்னாட்டு நதிகளும் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் கருங்கற் பாறைகளை இழுத்து மணலாக்கிக் கடலில் வீசுகின்றன.

(2) பூமியில் இருந்து மேல் கிளம்பிவரும் ஊற்றுகளும் மருந்துப் பொருள்களைத் தம்முட் கொண்டு உள்பாகத்தை அரித்து மேற்பாகத்தையும் கெடுக்கின்றன. வெந்நீர் ஊற்றுகளில் (Thermal Springs) உள்ள நீர் கரியமிலவாயு கலந்துள்ளதால் இந்நீர் பூமியின் அடியில் இருக்கும் பாறைகளைக் கரைத்து விடுகிறது. மேல் வரும்பொழுதும் பூமியின் சத்துக்களை மேலே கொணர்ந்து படியவைத்து மாறுதல்களை உண்டாக்குகிறது.

(3) கடலின் (Current) நீரோட்டங்களும், நீர் ஏற்ற வற்றமும் (Tides) அலைகளும் கடற் கரைகளையும் கரை ஓரமுள்ள கற்பாறைகளையும் குடைந்து இடித்துத் தள்ளுகின்றன.

(தொடரும்)

வடிவுதிருந்த அறிவு வளர்ந்த வகை

[திரு. க. ப. சந்தோஷம் அவர்கள், B.A., L.T.]

(சிலம்பு-கஉ: பரல்-கஉ: ருஅக-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பொழுது மக்கள்பால் விளங்கும் கடமை என்ற உணர்ச்சியைப்பற்றியும் ஒழுங்குபட வாழ்தல் (Decency) என்பது குறித்தும் சில கூறுவேன். இவை வடிவும் அறிவும் இசைந்து வளரும் வளர்ச்சியை யொட்டியே வருவன. மக்களைத் தவிர்த்த வேறு உயிர்களில் இவை காணப்படாமைக்குக் காரணம் உணவின் வேறுபாடேயாகும். உணர்ச்சிக்கேற்ப உணவு திருந்துவதை ஆராய்வோம். உயிர்வகைகள் எல்லாவற்றிலுங் கீழ்நிலையிலுள்ள ஓர் உயிரின் உணவு எத்தன்மைத்தாயிருக்கும்? எல்லாவற்றினுங் கீழான உயிர் மண்ணையே தின்னவேண்டும். இதை விளக்குமாறு, எடுத்துக்

காட்டுகள் எளிதிற் கிடைக்கக்கூடிய நிலையிலிருந்து தொடங்குவோம். செடிகளை முதலில் எடுத்துக்கொண்டு, அவற்றிலிருந்து கீழே உயிரற்றுக் கிடக்கின்றவற்றையும், மேலே மக்களையும், அவர்களுக்கு மேம்பட்ட நிலையையும் ஆராய்வோம். செடிகளின் உணவு யாது? மீன்கள் தின்பதென்ன? பாம்புகளுக்கும் புழுக்களுக்கும் இரை யாது? நாற்கால் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் தீனி யாது? இங்ஙனம், உயிர் வகைகள் உண்பதென்னவென்று கேட்குங்கால், மக்கள் எதை உண்கின்றார்கள் என்ற கேள்விக்கும் நாம் விடை காணவேண்டும். மக்களின் உணவாவது யாது? என்று கேட்க நான் நாணுகின்றேன். எதற்கெனின், அவர்கள் வையகத்திலுள்ள உயிர்கள் அடங்கலுந் தின்கின்றவற்றை எல்லாம் உண்கின்றார்கள்.

மரஞ் செடிகொடிகளுக்கு உணவு, மரஞ் செடிகொடிகளேயாம். சாணம், சாம்பல் முதலிய உரங்கள் மரக்கறியின் மாறுதல்களே. இலையையும் உரமாயிடுவதுண்டு. இதை நோக்குங்கால், மரஞ்செடி கொடிகள் தங்களைத் தாங்களே உண்கின்றன என்பது வெளியாகின்றது. ஆதலின், ஒருயிர் தன்னைப்போன்ற மற்றொன்றை இரையாக்கிக்கொள்வதிலேயே உணவின் வளர்ச்சி தொடங்குகின்றது. உணவின் வளர்ச்சியில் அடுத்தபடி இன்னதென்று பார்ப்பதற்கு மீன்களை உற்றுநோக்குவோம். மீன்கள் இடுகின்ற முட்டை எல்லாம் பொரிந்து சிறு மீன்களாகி வளருமாயின், நீண்டகன்ற பெருங்கடலும் அவற்றிற் கிடமளிக்கப் போதியதாகாது. கடலே மீன்மயமாயிருக்கும். இது கருதலளவையாற் பெறப்படும். இவ்வுண்மை காண்டலளவைக்கு எட்டுமாறும் யான் செய்திருக்கின்றேன். யான் சிறுவயதில் எங்கள் நிலங்களிலுள்ள கிணறுகளிலுங் குளங்களிலும் நீந்தித் திரியும் மீன்களை ஊன்றி நோக்குவது வழக்கம். நிலமும், குளமும், கிணறும் ஆகியவையே இளவயதில் யான் பயின்ற பல்கலைக் கழகமாயிருந்தன. இரண்டு மீன்களிலிருந்து பன்னூறாயிரம் மீன்கள் தோன்றும். ஆயின், இவை எப்படி மறைந்து போகின்றன? இவற்றைத் தோற்றுவித்த பெரிய மீன்களே அதிவிரைவில் குஞ்சுகளைப் பிடித்துத் தின்றுவிடுகின்றன. இதைக்கண்டபின், நாம் விரும்புமாறு மீன்களைப் பெருகச் செய்யும் வகையை யான் அறிந்துகொண்டேன். பெருமீன்கள் இடும் முட்டைகளிலிருந்து சிறு மீன்கள் தோன்றியவுடனே, ஈன்ற மீன்களை அகற்றிவிடுக. இவ்வாறு செய்யின் ஓரளவினவாய சிறு மீன்கள் ஒன்றைவிட ஒன்று ஆற்றல் மிகுந்து மற்றவற்றை விழுங்கா. ஒரு கிணற்

றில் இவ்வாறு செய்துபார்த்தபொழுது, பல்லாயிரக்கணக் காய் மீன்கள் பெருகியதனுல் நீரோடு மீன்களையும் இறைக்கும் நிலைமை ஏற்பட்டது. ஈன்ற மீன்கள் அவற்றைத் தின்னுந் தொழிலை மக்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

தாழ்ந்த நிலையிலுள்ள உயிர்களில் பெரியவை சிறிய வற்றை விழுங்குவதே உணவு முறையாயிருக்கின்றது. மீன் களைவிட உயர்ந்தபடியிலுள்ள உயிர்களது உணவின் தன் மையை ஆராய்வதற்குப் பன்றியை எடுத்துக்காட்டாகக் கொள்வோம். (ஈண்டு அவையிலிருந்த ஒருவர் எழுந்து 'பன் றியை ஏன் நீங்கள் ஓர் அறிவிலா விலங்கிற் கெடுத்துக்காட் டாகக் கொள்கின்றீர்கள்?' என்று கேட்டார். இக்கேள்விக்கு விடை கூறும்பொருட்டு நான் மற்றொரு வினு எழுப்பினேன். தொல்காப்பியத்தில் ஒரு வினுவிற்கு மற்றொரு வினு விடை யாய் அமைதல் கூடும் என்று கூறப்பட்டிருக்கின்றது.

'வினுவுஞ் செப்பே வினுவெதிர் வரினே'

இதைக் கருத்திற்கொண்டு யான் அவரை நோக்கி, 'பல்வேறு விலங்குகளை அவற்றின் இயற்கைக்கு மாறுபட்ட பலதொழில் களைச் செய்யுமாறு பயிற்றுவித்து விளையாட்டுக்காட்டுங் குழாங்களில் (circus) பன்றியைத் தாங்கள் யாண்டேனுங் கண்டதுண்டோ' என்று வினவினேன். மக்கள் தம் உயர்ந்த அறிவின் துணைகொண்டு, சீறிப் பாய்கின்ற காட்டு விலங்கு களை எல்லாம் பழக்கித் தாம் கருதிய தொழிலைச் செய்யுமாறு அவற்றிற்குப் பயிற்சி யளிக்கின்றனர். பன்றி இவ்வாறு பயிற்றப்படாமையின், அஃது அறிவில் மிகத் தாழ்ந்த தென் பதற்கு ஐயமுண்டு கொல்!)

பல்வேறு உயிர்களின் உணவைக் கூர்ந்து பார்க்கத் தொடங்கினேம். பன்றிக்கு மேலுள்ள புலால் உண்ணும் விலங்குகளைப் பார்ப்போமாயின், அவை தாம் ஈனுங் குட்டி களைத் தின்பதில்லை என்பதையும், தங்களிலிருந்து வேறுபட்ட சிறிய உயிர்களைக் கொன்று தின்னும் என்பதையுங் காண் கின்றோம். இதுவே உணவு வளர்ச்சி முறையில் இரண்டாவது படியாகின்றது. இவ்வளர்ச்சியில் மூன்ருவது படி புல்மேயும் விலங்குகளில் வெளிப்படுகிறது. இவை வேறு உயிர்களைக் கொன்று தின்பதில்லை. ஆனல், இவற்றின் குட்டிகள் தாய்ப் பாலைக் குடிக்கின்றன. தாய்ப்பால் என்பது புலால் தொடர் பில்லாததென் றுரைத்தல் சாலாது. புல்லுண்ணும் உயிர்கள் புலால் உண்ணும் உயிர்களைவிட உயர்ந்திருக்கின்றன வென் பதை யறிகின்றோம். ஆயினும், இவை புற்பூண்டுகளை ஒருங்கே

அழித்து விடுகின்றன வென்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். இனி, இதற்குமேலுள்ள நிலைக்குச் செல்வோம். இந்நிலையிலுள்ளவை பறவைகளாம். இவைகள் புல்லுணிகளை விட அறிவிற் சிறந்திருக்கின்றன. எவ்வாறெனின், இவை பெரும்பாலுங் காய்கனிகளை உண்டு வாழ்கின்றன. காய் கனிகளைத் தங்களுக்கு உணவாகத் தரும் செடி கொடிகளை இவை அழிப்பதில்லை; பழங்களை உண்டு அவற்றிலுள்ள கொட்டைகளை எருவாயால் இவை கழித்து விடுகின்றன. இங்ஙனம் இவை செய்வது ஓர் இயற்கை உணர்ச்சியால் உந்தப்பட்டென்க. (புலால் உண்ணும் பறவைகளும் உள. இவற்றைப்பற்றி ஒன்றுங் கூறாது விட்டது பெரும்பான்மை யான பறவைகள் புலால் உண்பதில்லை என்பதுபற்றிப் போலும்). இங்ஙனம் மீனிலிருந்து மக்கள்வரையிலும் அதற்கு மேலும் அறிவின் வளர்ச்சி உணவின் வளர்ச்சியோடு பொருந்திக் கிடக்கின்றதென்பதை அறிகின்றோம்.

மக்களுக்கும் பிற உயிர்களுக்குமுள்ள பெரியதொரு வேற்றுமை யாதெனின், அவர்கள் ஒரு பிறப்பிலேயே மற்றெல்லா உயிர்களின் நிலைகளையும் பெற்று அவற்றிற்கு மேலான நிலைமையை அடைகின்றார்கள். ஒரு மகன் ஒரு பிறப்பிலேயே மரம், விலங்கு, பறவை, குரங்கு ஆகிய இவற்றின் பிறப்புகளை ஊடுருவிச் சென்று மக்கள் நிலையை எய்தி அதற்கு மேற்பட்ட ஓர் நிலையின் அறிவையும் உடையவனாகின்றான். மற்ற உயிர்கள் மக்களைப்போல் வேறு பல் உயிர்களின் நிலையைக் கடந்து செல்லமாட்டா. மக்கட்பிறவி ஒன்றுக்குத்தான் அத்தன்மை உண்டு. ஆதலின், மக்களது உணவு தம்மைப்போன்ற பிற உயிர்களைத் தின்னும் நிலையிலிருந்து சிறிது சிறிதாகத் திருந்தி, மரக்கறியுண்ணும் நிலையை யடைந்திருக்கிறது. ஒரு குழவி தாயின் பாலையுண்பது தன்னைப் போன்ற ஓர் உயிரை உண்பதேயாகும். அறிவியல் வகையில் நோக்குங்கால், பாலுண்பது இதைத்தவிர வேறொன்றுமாகாது. வைதீகராகிய பலர், கண்ணாடிக்குப்பிகளில் அடைத்து விற்கப்படும் புலாற்சாற்றை உட்கொள்ள மறுப்பதில்லை. ஒரு கோழியைக் கொன்று சமைப்பது அவர்களுடைய உளத்தைப் புண்படுத்துந் தன்மையதாயிருக்கின்றது. ஆனால், மருத்துவர்கள் கோழிக்குஞ்சினின்றும் இறக்கிய சாற்றை மருந்தாக உண்ணவேண்டுமென்று கூறுங்கால் இதற்கவர்கள் உடன்படுகின்றார்கள். பாலுண்பதும் இதுபோன்ற ஒரு நிகழ்ச்சியே. இந்த நிலையிலிருந்து சிறிது சிறிதாக மக்கள் முன்னேற்ற மடைந்து கலப்பற்ற மரக்கறியுணவை உட்கொள்ளும் நிலையில் மேலான நாகரிகம் பெற்ற

வர்களாகின்றார்கள். மரக்கறியுணவை யுண்ணும் ஒரு திறத்தார் முதன் முதல் தமிழகத்தில் தோன்றினர். மற்றவர்கள் இந்த நல்வழக்கத்தை நம்மிடமிருந்து கற்றுக்கொண்டனர்.

எல்லாங் கடந்த பொருளின்—கடவுளின்—தன்மைகளில் மற்றொன்றை உய்த்துணர உங்கள் உள்ளும் ஆற்றலை வழங்குமின். ஓர் உயரிய நல்லெண்ணம் தோன்றுமாயின், கிறித்தவராயினும், இந்துவாயினும், முகம்மதியராயினும், யாராயினுஞ்சரி, நோன்பு கைக்கொள்வது வழக்கமாயிருக்கிறது. நோன்பு நாளில் மரக்கறியுணவையுமகற்றி நீர் மாத்திரம் அருந்துகின்றோம். முகம்மதியருள் நீர் அருந்துவதும் விலக்கப் படுகிறது. இந்த நோன்பு நிலை, மக்கட் பிறவிக்குமேலான ஒரு நிலையை எய்தும் பொருட்டு இயற்கை உணர்ச்சியால் தூண்டப்பட்டு நாம் மேற்கொள்ளுகின்ற ஒரு முறையாகும். மேலான ஒரு நிலையை எய்துதற்கு உணவு சுருங்கவேண்டுமென்பதை நாம் உணர்கின்றோம். தவஞ் செய்வோரும், தத்துவம் உணர்வோரும் உடம்பும் உயிரும் ஒன்றியிருத்தற்கு வேண்டிய அளவே உணவை உட்கொள்கின்றனர். மகாத்மா காந்தி இவ் உண்மையைத் தம் வாழ்க்கையில் நன்கெடுத்துக் காட்டியிருக்கின்றனர். மகாத்மா காந்தியைக் காட்டிலும் பேரளவில் இதை உலகுக் கொடுத்துக் காட்டியவர் நாகபட்டினத்து யோகியாவர்; இவர் சிலவாண்டுகள் எத்தகைய உணவுமின்றி உயிரோடிருந்தார். அயர்லாந்து நாட்டு மெக்ஸ்வீனி (Mac Sweeny) அறுபத்தேழுநாள் நீரின்றி வேறொன்றும் அருந்தாது உயிரோடிருந்ததை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்த நீண்ட பட்டினியும் தமிழுலகத்து முன்னோர் சிலர் நிகழ்த்திய 'வடக்கிருத்தல்' என்னும் செய்திக்கிணையாகாது. வடக்கிருத்தல் என்பது நோன்பிருந்து உயிர் துறத்தல். சிறந்த தமிழ்ப் புலவருள் ஒருவராகிய கபிலர், தமது நண்பனாகிய பாரி எனும் வள்ளல் தன் மகளிர் இருவரைத் துணையின்றி விட்டு மாண்டனனாக, அம் மகளிர்க் கேற்ற கணவரைத் தேடிக் கொடுப்பது தமது கடமை என்று அங்குமிங்கும் அலைந்து தேடினர். இது நிறைவேறாது போகவே, புலனழுக்கற்ற அப்புலவர், வடக்கிருந்து இவ்வாழ்வை நீத்தனர். வடக்கிருத்தல் என்னும் இச்செய்தி ஒருவரது நாணுடைமை புரைபட்ட பொழுது உணவு நீக்கி உயிர் துறக்கும் ஓர் ஒழுக்கமாகும். தமிழ்ச் சான்றோரால் பின்பற்றப்பட்ட இச்சீரிய ஒழுக்கத்தை இக்காலத்துள்ள தமிழ் மக்கள் மறந்தார்கள். தமிழ் அகாரதிகளிலும் இச் சொற்றொடர் காணப் படவில்லை.

51

இதனால் நாமறிவது என்னவெனின், மக்களினும் மேம்பட்ட நிலையை அடைதற்கு உணவு பெரிதும் சுருங்க வேண்டுமென்பதேயாம். இதைக் கடவுள் நிலைக்குச் செலுத்துங்கால், கடவுள் எதையும் எக்காலத்தும் உண்பதாகாது என்பது வெளியாகிறதல்லவா? (தொடரும்)

தமிழ் அளவைநூற் சொற்கள்

[திரு. மா. பாலசுப்பிரமணியம், M. A.]

(சிலம்பு-௪௩: பரல்-௪௨: ௫அஅ-ம் பக்கத் தொடர்ச்சி)

(உரிமை ஆக்கியோர்க்கு)

54. சொரூபலக்ஷணம்—தற்சிறப்பியல்பு
55. தடஸ்தலக்ஷணம்—சார்சிறப்பியல்பு
56. அதத்துவியா விருத்தலக்ஷணம்—பிரிவு சிறப்பியல்பு
57. பிரமை—உண்மை யறிவு—Right knowledge
58. பிரமிதி—உண்மை யறிவு—Right knowledge
59. பிரமாதா—அளந்தறிவான்—Knower
60. ஆக்ஷேபம்—தடை—Objection
61. சமாதானம்—அமைவு—Answer
62. ஸந்தேஹம்—ஐயம்—Doubt
63. விபரீதம்—திரிபு—Error
64. யதார்த்த அநுபவம்—உண்மை யறிவு (பிரமை)—Right knowledge
65. அயதார்த்த அநுபவம்—இன்மை யறிவு—False knowledge
66. பிருதிவி—மண்; நிலம்—Earth
67. அப்பு—நீர்; புனல்—Water
68. தேயு—தீ; அனல்—Fire
69. வாயு—வளி; கால்—Air
70. ஆகாயம்—வெளி—Space
71. காலம்—பொழுது—Time
72. திக்கு—திசை—Direction
73. ஆத்மா—உயிர்—Soul
74. மனம்—உள்ளம்—Mind
75. உருவம்—வடிவம்—Shape
76. இரசம்—சுவை—Taste
77. கந்தம்—நாற்றம்—Smell
78. பரிசம்—ஊறு—Touch

52

79. சங்கை—எண்—(சங்கியம்)—Number
80. பரிமாணம்—அளவு—Measure
81. பிரதக்த்வம்—வேற்றுமை—Disjunction
82. சம்யோகம்—கூட்டம்—Conjunction
83. விபாகம்—பிரிவு—Division
84. பரத்வம்—முன்மை—Proximity
85. அபரத்வம்—பின்மை—Remoteness
86. குருத்வம்—திண்மை—Solidity
87. திரவத்வம்—நெகிழ்ச்சி—Fluidity
88. ஸ்நேகம்—நட்பு—Cohesion
89. ஸப்தம்—ஒலி—Sound
90. புத்தி—அறிவு—Intelligence
91. சுகம்—இன்பம்—Happiness
92. துக்கம்—துன்பம்—Sorrow
93. இச்சை—காமம்—Love
94. துவேஷம்—வெகுளி—Hatred
95. பிரயத்னம்—முயற்சி—Effort
96. தர்மம்—அறம்—Spiritual benefit
97. அதர்மம்—மறம்—Spiritual demerit
98. சம்ஸ்காரம்—நினைவு—Memory
99. சக்தி—ஆற்றல்—Potency
100. சாத்ரிஸ்யம்—ஒப்பு—Similarity
101. உத்க்ஷேபனம்—எழும்பல்—Springing up
102. அவக்ஷேபனம்—வீழ்தல்—Falling down
103. ஆகுஞ்சனம்—வளைதல்—Bending
104. பிரசாரணம்—நிமிர்தல்—Stretching
105. கமனம்—நடத்தல்—Walking
106. பரசாமான்யம்—மிகுதிப் பொதுமை—Wide generality
107. அபரசாமான்யம்—மிகுதியில் பொதுமை—Limited generality
108. பிராகபாவம்—முன்னின்மை—Antecedent Non-existence
109. பிரத்வம்சாபாவம்—அழிவுபாட்டின்மை—Destructive Non-existence
110. அத்யந்தாபாவம்—முற்றுமின்மை; முழுதுமின்மை—Absolute Non-existence
111. அந்யோன்யாபாவம்—ஒன்றினொன்றின்மை—Mutual Non-existence
112. ஸ்மிருதி—நினைவு—Recollection

113. அநுபவம்—அறிவு—Experiential knowledge
114. பிரத்யக்ஷம்—காட்சியறிவு; காட்சி—Perception & Perceptual knowledge
115. அநுமிதி—கருதலறிவு—Inferential knowledge
116. உபமிதி—உவமையறிவு—Analogical knowledge
117. சாப்தம்—உரையறிவு—Testimonial knowledge
118. அநுமானம்—கருதல்—Inference
119. உபமானம்—உவமை—Analogy
120. சப்தம்—உரை—Verbal Testimony
121. காரியம்—ஆக்கம்—Effect
122. காரணம்—ஆக்கமுன்—Cause
123. கரணம்—சிறப்பாக்கமுன்—Special cause
124 சமவாயி காரணம்—உடனிலை யாக்கமுன்--Inherent cause
125. அசமவாயி காரணம்—உடனிலையா வாக்கமுன்—Non-inherent cause
126. நிமித்த காரணம்—இயக்கவாக்கமுன்—Operation or Efficient Cause
127. சவிகல்பகப் பிரத்யக்ஷம்—நுண்ணியற் காட்சி
128. நிர்விகல்பகப் பிரத்யக்ஷம்—பிண்டக் காட்சி—பருவியற் காட்சி
129. இந்த்ரியம்—புலன்—Sense-organ
130. ஸன்னிகர்ஷம்—யாப்பு—Relation
131. ஸம்யோகம்—பொருத்தம்—Contact
132. ஸம்யுக்த ஸமவாயம்—பொருத்தவியைபு
133. ஸம்யுக்த ஸமவேத ஸமவாயம்—பொருத்த வியைபு ளியைபு
134. ஸமவாயம்—இயைபு—Inherence
135. ஸமவேதஸமவாயம்—இயைபு ளியைபு
136. விசேஷண விசேஷ்யபாவம்—பண்பு பொருளியாப்பு
137. பராமர்ஸம்—ஆராய்ச்சி
138. வியாப்தி—நிறைவு
139. விஸிஷ்டம்—அடுத்துள்ளது
140. பக்ஷதர்மதம்—துணிபொருண்மை
141. ஸஹகார்யநியமம்—உடனுக்கமுறை
142. ஸ்வார்த்த அனுமானம்—தன்பொருட்டுக் கருதல்
143. பரார்த்த அனுமானம்—பிறர்பொருட்டுக் கருதல்
144. லிங்கம்—குறி
145. பஞ்சாவயவ வாக்யம்—ஐயுறுப்புத்தொடர்—Syllogism

(தொடரும்)

வரலாற்றுப் பகுதி: History & Biography

திருவனந்தபுரம்

திரு. தி. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை B A., அவர்கள்

பண்டைத் தண்டமிழ் நாட்டினுளொன்ருன சேரநாட்டுத் திருவனந்தபுரத்திற் செறிந்து சிறந்த, வேளாண் குலமக்களில் கல்வியறிவாற்றல்களிற் றலைசிறந்து விளங்குபவர் மூவர். அவர்கள் பஞேன்மணிய நாடக நூலாசிரியர் திருவாளர். பே. சுந்தரம்பிள்ளையவர்கள். எம். ஏ.; திருவாளர். தி. முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை அவர்கள், பி. ஏ., இப்பொழுது விளங்கும் இசைத்தமிழ்ச் செல்வர் திருவாளர். தி. இலக்குமணப்பிள்ளை அவர்கள் பி. ஏ.

பல்பெருங்கலைகளில் வல்லுநராகித் தென்னிந்தியா முழுதும் புகழ்படைத்திருந்து காலஞ்சென்ற திருவாளர். T. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள், வலியமேலெழுத்து திருவாளர். M. திரவியம் பிள்ளை அவர்களின் மூத்தபுதல்வரும், இசைத்தமிழ்ச்செல்வர் திருவாளர். T. இலக்குமணப்பிள்ளை அவர்களின் தமையனும் ஆவர்.

இவர் சைவவேளாள குலத்தில் உயரிய குடும்பத்தில் திருவனந்தபுரம் சாலைத் தெருவில் 1856-ம் ஆண்டிற் பிறந்தார். சிறு ஆண்டில் "ஆண்டியப்பன்" என்ற செல்வப்பெயர் பூண்டு சாலைத் தெருவில் ஒரு தமிழ்ப்பள்ளிக்கூடத்தில் தமிழ்ப்பயின்ருர். சிறந்த வடமொழிப் பண்டிதராகவும் சோதிடராகவும் விளங்கிய காலஞ்சென்ற திருவாளர் தாணுப்பிள்ளை யவர்களிடம் மாணவராயிருந்து வடமொழியிலும் மலையாளத்திலும் தேர்ச்சிபெற்ருர். இதுவுமன்றி, திருவனந்தபுரம் சைவப்பிரகாச சபை நிறுவிய சிறந்த தமிழறிஞரும் வக்கீலு மாயிருந்த திருவாளர். M. சாமிநாத பிள்ளை அவர்கள் முதன்முதல் அவ்விடம் ஆங்கிலக் கல்லூரியில் தமிழ்ப்பண்டிதராயிருக்க, அவர்களிடமும், திருவாளர். சாமிநாததேசிகர் அவர்களிடமும் தமிழ்ப்பயிற்சி பெற்று வந்தனர். தமது பன்னிரண்டாவது ஆண்டுமுதல் திருவனந்தபுரம் ஆங்கிலக் கல்லூரியில் ஆங்கிலங் கற்கத் தொடங்கி F. A., B. A., பரீட்சைகளில் முதலாவதாகத் தேறினர்.

மாணவராயிருக்கும்போதே ஆங்கிலத்தில் மிகுந்த புலமையுற்றுப் புகழ்பெற்ருர். இவர் மேல் வகுப்புக்களில் மாணவராயிருக்கும்போது, நூல்கள் கற்றுக்கொண்டது பரீட்சையிற் றேறவேண்டுமென்ற ஒரே கருத்துக்கொண்டு

மட்டுமன்று; ஒவ்வொரு கலையிலும் தேர்ச்சிபெற வேண்டுமென்ற விழுமிய நோக்கத்தோடேயேயாம்.

அக்காலத்தில் கல்லூரித்தலைமையாசிரியரா யிருந்த, மிஸ்டர். ராஸ் எம். ஏ., டாக்டர் ஹார்வி எம். ஏ., எல். எல், டி., என்னும் இரண்டு பெரியார்களும், இவர் கல்வித்திறமையை வியந்து இவரை மிகவும் பாராட்டி வந்தார்கள். இவர் எழுதிய ஆங்கில நடையை வியந்து இவரை "இள மேக்காலே" (Young Macaulay) என்று டாக்டர் ஹார்வி துரைமகனார் புனைந்துரையாக அழைப்பதுண்டு. இவர் 1878-ம் ஆண்டு பி. ஏ. பட்டம் பெற்றனர்.

அந்த ஆண்டிலேயே பாளையங் கோட்டையில் C. M. S. கல்லூரியில் முதல் உதவியாசிரியராய் அமர்ந்து, பின்பு அவ்விடம் (Hindu High School) இந்து உயர்தரப்பள்ளியில் தலைமையாசிரியராயினர். அப்பள்ளிக்கூடத்தையும் பெருமுயற்சி செய்து மேனிலைக்குக் கொண்டுவந்தனர். பாளையங் கோட்டையில் "ரெவ-ஷாப்டர்." "ரெவ—லாஷ்," (Rev. Schaffter, Rev. Lash), என்ற இரண்டு ஐரோப்பிய கனவான்களின் நன்மதிப்புப்பெற்று, அவர்களின் வேண்டுகோட்கிணங்கி அவ்விடம் ("Young Men's Association") இளைஞர் சங்கத்தில் பல விரிவுரைகள் நிகழ்த்தியுள்ளார்கள். அவற்றில் எழுதி வாசிக்கப்பட்ட (1) Faith and Experience (2) Cosmos not Chaos. (3) The unknown என்னும் தலைப்புடைய மூன்று விரிவுரைகள் இப்போதும் உள்ளன. திருநெல்வேலியில் "கல்வி" என்னும் பொருள்பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தியபோது திருநெல்வேலி டிஸ்டிரிக் கலெக்டர் மிஸ்டர் ஜெ. பி. பென்னிங்டன் (Mr. J. B. Pennington) என்ற புகழ்பெற்ற துரைமகனார் அவைத்தலைமை பூண்டனர். அவர் பிள்ளை அவர்களின் சொற்பொழிவையும் புலமையையும் மிகவும் பாராட்டிப் பேசினார்.

1882-ம் ஆண்டுத் தொடக்கத்தில் பிள்ளை அவர்கள் திருநெல்வேலி இந்து கல்லூரி (Hindu College) யில் திருவாளர் P. சுந்தரம்பிள்ளை, எம். ஏ. அவர்களுக்குப் பதிலாக சில காலம் (Principal) தலைமையாசிரியராக இருந்தார்கள். அவ்வருடத்தில் திருவனந்தபுரம் ஆங்கிலக் கல்லூரியில் (Professor of Philosophy and Logic) வேலைபார்த்து வந்த திரு. P சுந்தரம்பிள்ளை அவர்கள் உசூர் பிறவகைசிரஸ்ததாராகச் சென்றபோது, அவ்வேலைக்குப் பிள்ளை அவர்கள் கொல்லம் ஆண்டு 8-12-82-ல் ஏற்படுத்தப் பெற்றார்கள். அவ்வேலையை மேற்கொள்ளத் திருவனந்தபுரத்துக்குப் புறப்படுந் தறுவாயில் திருநெல்வேலியில் பிள்ளை அவர்களுடைய நண்பரும்

வியப்பாளரும் கூடிப்படித்தளித்த ஒரு சிறந்த பிரிவு மொழிப் பத்திரத்தில் அவர்களுடைய கல்விவளத்தையும், மதிநுட்பத்தையும், ஆசிரியத் திறமையையும் சான்றாண்மையையும் வியந்து கூறி மகிழ்ந்தார்கள். திருவனந்தபுரத்தில் தமது புதிய வேலையை 5-2-83-ல் ஒப்புக்கொண்டார்கள். அவ்வேலையை மூன்றுவருடம் பார்த்துவரும்போது, ஆங்கிலம், கணக்கு, சரித்திரம் முதலிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர் சிறிது காலம் ஒய்வு எடுத்துப்போகையில் அந்தப் பாடத்தைக் கற்பிப்பதற்குப் பிள்ளையவர்களே தெரிந்தெடுக்கப் படுவார்கள்.

1887-ம் வருடத்தில் பிள்ளையவர்கள் திருவிதாங்கூர் இரண்டாம் இளமன்னராகிய அசுவதி திருநாள் மன்னர் அவர்களுடைய ஆசிரியர் (Tutor) ஆக ஏற்படுத்தப் பெற்றார்கள். அவ்வேலையை மிகத்திறமையாகப் பார்த்து வந்ததால் அந்தமன்னருடைய நன்மதிப்பும் அன்பும் வாய்க்கப் பெற்றார்கள்.

1889-ம் ஆண்டு ஜனவரித் திங்களில் திருவனந்தபுரம் திவான் பேஷ்காருடைய உதவியாளரும் முதற்படி மாஜிஸ்ட்ரேற்றுமாக (Assistant to the Dewan Peishkar and First class Magistrate)ப் பிள்ளையவர்கள் ஏற்படுத்தப் பெற்றார்கள்.

அவ்வேலையில் அமர்ந்திருந்தபோது இடையிடையே இளமன்னரின் படிப்புக்காரியத்தையும் கவனிக்க வேண்டியிருந்தது. பின்பு, கோட்டையம், பத்மனுபபுரம் இவ்விடங்களில் அதே வேலையிலும், 1890-ம் வருடத்தில் சிலமாத காலம் ஆலப்புழை கம்மர்ஷியல் ஏஜன்டினுடைய அஸிஸ்டன்டாகவும் (Assistant to the commercial agent and first class magistrate) வேலை பார்த்து வந்தனர். கோட்டையத்திலும் நாகர் கோவிலிலும் இருக்கும்போது பூக்கள் (Flowers) செடிநூல் (Botany) மனிதப்பொறுப்பு (Human Responsibility) என்னும் பொருள்கள் பற்றிப் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார்கள். 1894-ல் திருவனந்தபுரத்துக்குச் சில பெருமக்களால் அழைக்கப்பெற்று கரமனேயில் "இளைஞர் பரஸ்பர மேம்பாட்டுக்ககழம்" (Young men's Mutual Improvement circle) என்னும் அவைக்கண்ணே "பயிற்சி" (Culture) என்னும் பொருள்பற்றி ஒரு சிறந்த சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அன்று தலைமை தாங்கிய திருவனந்தபுரம் கல்லூரிக் கணக்குப்பேராசிரியர் (Professor of Mathematics) டாக்டர் மிச்சல் (Dr. Mitchall) துரை, மகனார் சொற்பொழிவைப் பற்றி வியந்து கூறும்பொழுது

சொற்பொழிவாளர் "மனிதரைச் சீனம் முதல் பெரு வரை" (உலகமுழுதும் என்றபடி), மேற்பார்வையிட்டார் (Surveyed mankind from China to Peru) என்றுரைத்தார். அன்று அச்சொற்பொழிவைக் கேட்கவந்திருந்த பிரிட்டிஷ் ரெஸிடெண்ட் 'கிரிக்' என்னும் ஐரோப்பியப் பெருமகன் (Mr. Grigg., the British Resident) அத்துணை விழுமிய அறிவு நிரம்பிய சொற்பொழிவுகளை மக்களின் நன்மைக்காக நிகழ்த்துவித்தலால், அக்கழகத்திற்கு ஒரு பெருந்தொகையை நன்கொடையாக அளித்தனர்.

பற்பல கலைகளிலும் அறிவு வளரச் செய்து கொண்டு, ஆயிரக்கணக்காய்ப் புத்தகங்கள் படித்துச் சிறிதும் தமக்கு ஓய்வு கொடாமலிருந்த காரணத்தால், பிள்ளையவர்களுக்கிருந்த மூலநோய் மிகுந்து கடைசியாகக் காய்ச்சல்கண்டு பல மருத்துவர் முயற்சியாலும் நலப்படாமல் 1897-ம் வருடம் ஆகஸ்டுத் திங்கள் 1 நாளில் தனது 41-வது அகவையில் பூதவுடம்பு நீத்துப் புகழுடம்பு பெற்றார்கள். கடைசி நாட்களில் அசுவதி திருநாள் இளையமன்னர் அவர்கள் தகுந்த மருத்துவரை அழைப்பித்துத் தமது ஆசிரியராகிய பிள்ளையவர்களை நலப்படுத்தமுயன்றும் பயன்படவில்லை.

பிள்ளை அவர்கள் காலஞ்சென்றதைக் குறித்து அந்நாளிருந்த திவான், திரு. கிருஷ்ணசாமி ராயர் அவர்கள், "In him the family has lost a prominent member of great promise, the Country a great scholar and the State an honest public servant." (அவர் போனதில் அக்குடும்பம் பெரும்பதவிக்கு வரக்கூடிய ஒரு முக்கியமான உறுப்பினரை யிழந்தது, இந்நாடு ஒரு பெரிய கல்வியாளரை யிழந்தது, துரைத்தனம் உண்மைவழி யொழுகும் ஒரு தொண்டனை யிழந்தது" என்று வியந்து எழுதியது இங்குக் குறிப்பிடத் தகுந்தது.

பிள்ளையவர்கள் ஆங்கில இலக்கிய நூல்கள், பழைய கிரேக்க உரோம இலக்கிய நூல்கள், தமிழிலக்கிய நூல்கள், ஞான நூல்கள், மனோதத்துவநூல், சடதத்துவநூல், அளவை நூல், உடல்நூல், மருத்துவநூல், வரலாற்றுநூல், கணக்கு, சட்டம், சோதிடம், வானநூல், செடிநூல், உயிர்நூல், பரிநூல், தோட்டம் வைத்தல், பாகநூல் முதலிய பல துறைகளில் ஆழ்ந்த புலமையும், அகன்ற நோக்கமும், விழுமிய மனப்பான்மையும் உடையவரென்று தென்னிந்தியா முழுவதிலும் புகழ் சிறந்து விளங்கினர்.

நகைச்சுவைப் பகுதி - Humour

அடிப்படிப்பு

வெறுஞ் சிறு மொழி

[கபசம் எழுதுவது]

[பாலையூர்ப் புலவர் குழாத்தின்முன், மாலையனூர் தலைமையின் கீழ், பகல் பன்னிரண்டு மணிக்கு நிகழ்த்தப்பட்ட ஒரு சொற்பொழிவின் சுருக்கம்.]

அறிவகன்ற ஐயன்மீர்,

தங்கள்முன் இன்று யான் பேச எடுத்துக்கொண்ட பொருள் 'அடிப்படிப்பு' என்பது. இக்குழாத்தினராகிய நீவிர் யாவரும் மிக உயர்கல்வியின ராதலால் அடிப்படிப்பைப் பற்றித் தங்கள்முன் பேச யான் மிக மிக நாணுகின்றேன். பொருளொடு பொருந்தாப் புன்மொழி, சிறுமொழி, வெறுமொழி பேசும் யான், தங்கள் முன்னிலையிற் பேசப் புகுவது பரிதிமுன் இரவி ஒளிவிட முயல்வது போலிருக்கிறது. (இங்கே, அவையிலிருந்தவர் சிலர் முணு முணுத்தனர்; இளம்புலவர் சிலர் பட்டாசு வெடித்ததுபோல் சிரித்தனர்.) இரவில் ஒளி செய்வது இரவி. இரவியா பரிதிமுன் நிற்கும்? இரவியாகிய யான் பரிதியாகிய தங்கள் முன் வெளுத்து வெட்கித் தோன்றுகின்றேன். தங்களுடைய வெப்பமிக்க ஒளி காய்கின்றமையால் யான் வியர்த்து வியர்த்துக் கொட்டுகின்றேன்; பெருமூச்சு விடுகின்றேன், சோர்வடைகின்றேன், அயர்ந்தேன், ஆ! கெட்டேன். (ஈண்டு அவையிலிருந்த மருத்துவன் குண்டோதரனர் விரைந்தெழுந்து வந்து என்னைத்தாங்கி நின்று, மாத்திரை ஒன்று கொடுத்த மாத்திரையில், பித்தந் தெளிந்து எனது சொற்பொழிவை மறுபடியுந் தொடங்கினேன்.)

அடிப்படிப்பென்பது, அடியிலுள்ள படிப்பென்று பொருள்படும். அடியிலிருந்து ஒவ்வொன்றும் படிப்படியாக வரவேண்டும். படிப்படியாக வருகின்றது தான் படிப்பு. படிப்பு அடியிலிருந்து வரவேண்டும். இதற்காகத்தான் முன்னாளில் பிரம்படி, மிலாற்றடி முதலியவை வழங்கப்பட்டன. (ஆ, ஆ; ஏ, ஏ; ஓ, ஓ; ஆகா, ஓகோ என்ற ஓசைகள் இங்குக் கிளம்பின.) ஆரம்பக்கல்வி என்பது அடிக்கல்வி, அடிப்படிப்பு என்பதை எவர் மறுக்கக்கூடும்? ஆயினும், அடிப்படிப்பு என்று ஆரம்பக் கல்வியைச் சொல்லுவார் யாருமிலர். அடிப்படிப் பென்று சொல்ல அஞ்சுகின்றார்கள், நடுங்

குகின்றார்கள். இது பெரிதும் வருந்தற்குரியது. இதை நினைத்தால் எனக்கு அழுகை வருகின்றது. கண்ணீர் ஆறாய்ப்பெருகுகின்றது. என்னாற் பேசக்கூட முடியவில்லை. நாக் குழறுகின்றது. (இந்த நிலையில் நாவல் இலை கொண்டுவந்து வீசி, நாவற்பழம் அருந்தக் கொடுத்தபின் நாவன்மை எனக்குத் திரும்ப வந்தது.)

படிக்க வருகின்ற பிள்ளைகளுடைய தோலைப் பிரம்பு, மிலாறு முதலியவை கொண்டு பதனிட்டால், அவர்களுடைய அறிவு பதம் பெறும் என்ற கொள்கை ஒன்று இருந்தது. பதம் பெறுதல் என்ற சொற்றொடர்க்கு அடி அடைதல் என்பது பொருள். அடி அடையவேண்டும். ஒவ்வொருவரும் அடி அடையவேண்டும். அவ்வடி, சேவடி, சீரடி, மலரடி என்று பலவகைப்படும். சிவந்து தோற்றுமாறு கொடுக்கும் அடி சேவடி. மற்றவற்றிற்குப் பொருள் கண்டுகொள்க. தோலைப் பதனிட்டு அறிவு பதம் பெறச் செய்தலை இக்காலத்திற் பெரும்பாலர் ஏற்றுக் கொள்வதில்லை. பெரும் பாலர் யார்? பெரிய பிள்ளைகள்—மீசை முளைத்த குழந்தைகள், கிழக் குழவிகள், இவர்கள் தான் பெரும்பாலர். இந்த நிலையில் அடிப்படிப்பு என்பது, அடியற்ற படிப்பாக மாறிக்கொண்டு வருகின்றது. மற்றும், அடி என்பது தாள் என்ற பொருளுடைமை குறித்து, ஏட்டுப் படிப்பைத் தாள் படிப்பாக மாற்றிவிட்டார்கள். நாட்டில் எங்குப் பார்த்தாலும் சிறுவர்கள் கல்வி செவ்வனே நடைபெறுகிறதில்லை என்ற கூப்பாடு கிளம்புகின்றது. அடி சரியாய் வைக்காவிடின் நடை எங்கிருந்துவரும்?

இப்பொழுது சிறு பிள்ளைகளுக்குக் கற்பிக்கின்றவரெல்லாம் அடி என்பதை அகற்றிவிட்டு, வேறு முறைகளைக் கையாண்டு வருகின்றார்கள். குடிக்கின்றவர் குடியர் என்பது போல் அடிக்கின்றவர்கள் அடியர்களாயிருக்க வேண்டும். அடிக்கமாட்டோம் என்று சொல்கின்றவர்களை அடியர்கள் என்று எங்ஙனஞ் சொல்வது? அடியர்கள் அடியாராயினர். இவ்வடியார் கூட்டத்தை நாம் பகைக்கவேண்டும், எதிர்க்க வேண்டும், அவரோடு பெரும் போர் தொடுக்கவேண்டும். இது குறித்தன்றே யான் ஈண்டுத் தங்கள் முன்வந்து பேசத் துணிந்தது. அறிவு முற்றின ஐயன்மீர்! அடிப்படிப்பை முன்னிருந்த நிலைக்குக் கொணர்தற் பொருட்டு விரைந்தெழுமின், வினை செய்ம்மின், பொருள்கொடுமின், போர் தொடுமின்! (பெருத்த ஆர்ப்பரிப்பு).

இதன் பின் மாலையனார் எழுந்து எனக்கு மாலைசூட்ட, மால்மகனார் என்ற வினையாளர் மேடையில் வந்து நன்றி கூறக் கூட்டம் இனிது கலைந்தது

மலைப்பு எழுத்துக்கள்

["மால்" எழுதுவது]

1. எந்த எழுத்து மணக்கும்?
2. எந்த எழுத்துச் சுடும்?
3. எந்த எழுத்து எழுத உதவும்?
4. எந்த எழுத்து நாறும்?
5. எந்த எழுத்து எழுதும்?
6. எந்த எழுத்துப் பறக்கும்?
7. எந்த எழுத்து "இருக்காதே" என்னும்?
8. எந்த எழுத்துப் பிறனொருவனைக் கூப்பிடும்?
9. எந்த எழுத்தில் முப்பது நாட்களிருக்கும்?
10. எந்த எழுத்தில் பொருள்களைப் போட்டுக்கொள்ளலாம்?
11. எந்த எழுத்து பம்பாய் மாகாணத்திலுள்ள பெரும் பட்டினங்களுள் ஒன்று?
12. எந்த எழுத்து இரட்டித்தால் ஓர் உறவு முறையைக் காட்டும்?
13. எந்த எழுத்து இரக்கும்?
14. எந்த எழுத்து வாயைப் பிளக்கும்?
15. எந்த எழுத்து இரட்டித்தால் முறையிடும்?
16. எந்த எழுத்து இறக்கச் சொல்லும்?
17. எந்த எழுத்து வெறுத்து ஒதுக்கும்?
18. எந்த எழுத்து உசுப்பும்?
19. எந்த எழுத்து உமிழும்?
20. எந்த எழுத்துப் பிறனொருவனை மரியாதையின்றி அழைக்கும்?

---

1. பூ.	2. தீ.	3. மை.	4. பீ.	5. கை.
6. ஈ.	7. போ.	8. வா.	9. தை.	10. பை.
11. பு.(பூனா)	12. மா.(மாமா)	13. தா.	14. ஆ.	15. கூ. கூ.
16. சா.	17. சீ.	18. சூ.	19. தூ.	20. டே.

செய்திகளும் குறிப்புகளும்:
News and Notes

இந்திய நாடும் சமஸ்கிருதமும்

[பண்டித அ. நடராஜ பிள்ளை]

நாளது யுவஆண்டு ஆவணித்திங்களில் வெளியான கலைமகளின் கட்டுரைகளிலொன்றாகிய, "சமஸ்கிருதப் பெண்கவிகள்," என்பதனைக் காண நேர்ந்தது. அதன்கண், கட்டுரையாளர் முன்னுரையாகச் சிலவற்றை மொழிய முன்வந்து, வேண்டா கூறலாக, "இக்காலத்தில் ஆங்கிலம் இந்தியாவில் எந்த ஸ்தானத்தை வகித்து வருகிறதோ, அந்த ஸ்தானத்தைப் பண்டைக் காலத்தில் வகித்து வந்த ஆரியமொழி," என்ற தொடரொன்றைப் பொருத்தமின்றிப் போட்டுச்சென்ற போக்கே நமது கட்டுரைக்கு முழு முதலாகுமென்பதைச் செல்வி யன்பர்கள் நினைவிலிருத்த முயல்வதே நமது கட்டுரையின் முன்னுரையாம்.

இக்காலத்தில் ஆங்கிலம் இந்நாட்டில் எந்நிலையிலுளது என்பதைக் கட்டுரையாளர் கூர்ந்து நோக்கியிருப்பாராயின் அங்ஙனங் கூறமுன் வந்திருக்கவே மாட்டார். முதலாவது இலக்கிய மொழியாகவே இந்தியநாட்டில் எக்காலத்திலும் வழங்கிவந்த சமஸ்கிருதம் அரசியல் மொழியாகிய ஆங்கிலத்தின் நிலையினை எவ்வாறு எய்துதல் கூடும்? இரண்டாவது எந்த ஆரியவரசன் காலத்திற் சமஸ்கிருதம், இந்திய நாடெங்கும் ஆங்கிலமொழிபோல் பொது மொழியாகப் பேசப்பட்டும், எழுதப்பட்டும் வந்தது? இவ்விரண்டு வினாக்கட்குமுரிய விடைகளை முன்னர் எடுத்துக்காட்டி, அத்தொடரினை அவர் கையாண்டிருப்பின், யாம் எவ்விதக் குறையுங்கூற முன்வந்திருக்க மாட்டோம்.

அங்ஙனமன்றி, இந்திய நாட்டின் முக்காற் பங்கிற்கு மேல் ஆண்ட பேரரசனாகிய அசோகன் காலத்திலும், பாளி என்ற ஒருவித மொழியே பரவி இருந்தது என்ற உண்மையினையும், அவ்வசோக வரசனின் ஆட்சியும் புகாத தமிழ் நாட்டில், பாளி என்ற மொழியும் பரவ இயலாது போயிற்று என்ற நிலையினையும் கட்டுரையாளர் அறிந்து மறந்தோ, அன்றி அறியாமையாலோ அங்ஙனம் வரைந்து சென்றது, அவர் அம்மொழிமாட்டுக் கொண்ட குருட்டுப் பற்றினையே தெரிவிக்கின்றது.

பல்லாவரம் பொது நெறிக்கழகப் பேராசிரியர் மறைமலையடிகளார் எழுதித் தொகுத்த "அறிவுரைக் கொத்து" என்னும் நூலைச் சென்னைப் பல்கலைக்கழக இடை வகுப்பிற்கு இவ்வாண்டுப் பாட புத்தகமாக வைத்திருந்ததைக் குறித்து எழுப்பப்பட்ட தடையைப் பற்றி முன் இதழில் குறிக்கப்பட்டது. நற்காலமாக அத்தடை ஒதுக்கப்பட்டு நூல் பாடபுத்தகமாக இருத்தல் வேண்டுமென்று பாட புத்தகக் கழகத்தார் முடிவு செய்ததைக் குறித்துக் கழி பேருவகை யெய்துவதுடன் அக்கழகத்தாரை மானமார வாழ்த்துகிறோம்.

* * * *

சென்னைப் பல்கலைக் கழக வித்வான் தேர்தல் கழக உறுப்பினராகவும் தலைமைத் தேர்வினராகவும் பல ஆண்டுகளிருந்து தொண்டாற்றிவந்த மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி உ. வே. சாமிநாதையர் அவர்களுக்குப் பதிலாக ஆன்றகேள்வி அருந்திறற் புலவர் திருவாளர் கா. நமசிவாய முதலியார் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். திருவையாறு கல்லூரிப் பெரும்புலவர் வேங்கடாசலம் பிள்ளை அவர்களும் தேர்வுக் கழக உறுப்பினர்களில் ஒருவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளனர்.

மதிப்புரை

கபிலரகவல்

கபிலரகவல் என்னும் இந்நூல் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னே திருவள்ளுவர் உடன்பிறந்தவரான கபிலர் என்னும் நல்லிசைப் புலவரால் எளிய இனிய தமிழ் நடையில் பாடப்பெற்றது. கஙஅ அடிகளேயுடைய இந்நூலிற் பொதிந்துள்ள அறவுரைகளத்தனையும் திருக்குறளிற் போந்த அறவுரைகளோடு ஒத்து, அவற்றினுஞ் சுருக்கமுடையனவாய், எல்லா மதத்தவராலும் எல்லா மக்கட் பிரிவினராலும் உவந்தேற்றுக் கொள்ளப்படும் விருப்பம் வாய்ந்தனவாய், பயில்வோ ருள்ளத்திற் பசுமரத்தாணியெனப் பதியுங் கூர்மை வாய்ந்து திகழ்கின்றன. இந்நூலை அழகியதாய்க்குறிப்புரையுடன் அச்சிட்டு அடக்க விலைக்கு வெளியிட்ட சென்னைத் தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தார்க்கு எங்கள் நன்றி உரிமையாகின்றது.

தனிப்பிரதி விலை	அணா $\frac{1}{4}$
25 பிரதிகள்	அணா 4
100 பிரதிகள்	அணா 12

25 பிரதிகட்குத் தபாற் கூலி 2 அணாவாகும். அடியிற்கண்ட விலாசத்தில் கிடைக்கப்பெறும்.

கிடைக்குமிடம்:—

தமிழ்ப் பாதுகாப்புக் கழகம்,
139, பவழக்காரத் தெரு, சென்னை.

64



மாநூற் பேரறிஞர்

லூதர் பர்பாங்க்

௧௦௧-ஆம் பக்கம் பார்க்க.